நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 19 செப்/ஒக்டோபர் 1992 விலை 5/


உள்ளே


முஸ்லிம் காங்கிரஸ் பேரினவாதப் பந்தை விழுங்கியுள்ளதா?

- யூ.எம். நிஸார் பேட்டி

மற்றும் வழமையான அம்சங்களுடன்


தெரிவுக்குழு யோசனைகள்

# முன்னுக்குப் பின் முரணானவை - சிவா

# வட - கிழக்கு இணைப்பை சிதைப்பவை - குமார்

# அதிருப்தியை ஏற்படுத்துபவை - ஈ.றோஸ்

தெரிவுக் குழுவின் தலைவரான மங்கள முனசிங்க அவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக சில யோசனைகளை அண்மையில் தெரிவித்திருந்தார். இந்த யோசனைகள் தெரிவுக்குழுவின் சார்பின் முன்வைக்கப்படவில்லை. அவ்வாறாயின் இது மங்கள முனசிங்க சார்ந்த ஸ்ரீ.ல.சு. கட்சியின் யோசனைகளா அல்லது மங்கள முனசிங்காவின் அபிப் பிராயங்களா அல்லது வேறு யாருடையவா என்கிற பிரச்சினைகள் ஒரு புறமிருப்பினும் மறுபுறத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண என உருவாக்கப்பட்ட தெரிவுக்குழு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாகியும் எந்த உருப்படியான தீர்வையும் முன்வைக்காதது மட்டுமன்றி ஏழு தமிழ்க்கட்சிகள் முன்வைத்த நான்கு அம்சத் திட்டம் பற்றியும் மௌனம் சாதிப்பது தெரிவுக்குழு இனிச் சாதிக்கப்போவது ஒன்றுமில்லை என்பதை தெளிவுபடுத்துவது போலாகிறது.

இந்நிலையில் மங்கள முனசிங்காவின் தீர்வு தொடர்பான அபிப்பிராயங்களைப் பெற சரிநிகர் தமிழ் அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டது.


பார்க்க பக்கம் 11





# மீண்டுமொரு
# முஸ்லிம் இனப்படுகொலை

மீண்டும் ஒருமுறை நான்கு கிராமங்களைச் சேர்ந்த நூற்று அறுபதுக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் ஒரே இரவில் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டுள்ளார்களென சரிநிகருக்கு கிடைத்த செய்தி களையடுத்து இது தொடர்பாய் உண்மைத் தகவல்களையறிய முயன்றபோது கிடைத்தவை இவை:



இந்த கோரத்தனமான வெறியாட்டத்திற்கு பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள மகாவலி மேற்குக் கரைப்பிரதேசத்துக் கிராமங்களான அக்பர்புரம், அகமட்புரம், பள்ளியாகொடை, பம்பரான ஆகியன பலியாகியுள்ளன. விவசாயக் கிராமமான இந்நான்கு கிராமமும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அதிகாலை வேளையிலேயே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அதிகாலை மூன்று மணியளவில் காவலரணிலிருந்த எட்டுப் படையினர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு கிராமத்துக்குள் புகுந்தனர் புலிகள். துப்பாக்கி வேட்டுச் சத்தத்தையடுத்து விழித்துக் கொண்ட மக்கள் பதட்டத்துடன் பள்ளிவாசலை நோக்கி ஓடியுள்ளனர். தொடர்ச்சியாக அரை மணிக்கும் மேலாக வேட்டுச்சத்தம் எதுவுமில்லாதிருந்ததால் வீடுகளுக்குத் திரும்பி வந்த மக்களை ஒளிந்திருந்த புலிகள் தாக்கத் தொடங்கினர். பள்ளியகொட கிராமத்திலேயே மிக அதிகமாக எண்பத்திரண்டு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். மொத்தமாகக் கொல்லப்பட்டவர்களில் இருபத்தெட்டுப் பேர் பெண்கள் பதின்மூன்று ஒன்றுமறியாப் பச்சிளம் குழந்தைகள்.

அருகிலிருந்த பொலிஸ் நிலையத்திலிருந்து காலை எட்டு மணியளவிலேயே இரண்டு ஜீப் வண்டிகளில் பொலிஸார் வந்தனர்.

பார்க்க பக்கம் 11

## கறை படிந்த கரங்கள்

இம்முறை ஆசிரிய தலையங்கத்தை மிகத்துயரமானதும், மிக அசிங்கமானதுமான சம்பவத்திலிருந்து எழுத ஆரம்பிக்க வேண்டியிருப்பது ஒரு துரதிர்ஷ்டம்.

செப்டம்பர் 15, 92 இன் இருள் முற்றும் பிரியாத அதிகாலைப் பொழுதில் பொலநறுவையின் நான்கு முஸ்லிம் கிராமங்கள் மீது நடாத்தப்பட்ட கோரத்தாண்டவத்தில் நூற்று அறுபதுக்கும் மேலான முஸ்லிம்கள் களப்பலியாகினர்.

இந்தக் களப்பலிக்கு பச்சிளம் குழந்தைகள், பெண்கள், வயது முதிர்ந்தோர் என்ற எந்த பேதங்களுமின்றி இரையானார்கள்.

தமிழர் வீரம் 'கங்கை கொண்டு கடாரம் வென்றதோ' என்னவோ இந்த அப்பாவித்தனமான முஸ்லிம்களைக் கொன்று வீரம் பரப்பியது.

மானம், மனிதாபிமானம் உள்ள தமிழர் தம் தலை கவிழ்ந்தது.

படிந்தது அவமானம்.

வழமை போல புலிகள் இப்படுகொலையை மறுத்திருந்தாலும், கடந்து போன வரலாறு இந்த மறுப்புக்கு எதுவித அர்த்தப்பாட்டையும் கொடுப்பதாகவோ, யாரும் இதை நம்பத் தயாராகவோ இல்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதும், காத்தான்குடி, ஏறாவூர், அழிஞ்சுப்பொத்தான படுகொலைகளும், இதுவும் புலிகளின் அரசியலில்-புலிகளின் ஈழத்தில்-முஸ்லிகளுக்கு இடமில்லை எனத் தெரிவிப்பதாகவே உள்ளது.

முஸ்லிம்களை அரசியல் ரீதியாகவும், கருத்துரீதியாகவும் வென்றெடுக்க முடியாத, அவர்களது நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாத கையாலாகாத் தனத்தின் விளைவு தான் இந்தப் படுகொலைகளும் விரட்டியடிப்பும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும், அதனுடன் பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ள முஸ்லிம் மக்களின் சுயநிர்ணய உரிமையையும், மழுங்கடிப்பதாகவும், பின்தள்ளுவதாகவுமே புலிகளின் இந்நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

வடகிழக்கிலிருந்து முஸ்லிம் மக்களை ஒழித்துவிட்டு இலகுவாக ஈழம் காணலாம் எனப் புலிகள் நினைப்பார்களானால் அதைவிட மூடத்தனம் ஒன்றிருக்க முடியாது என்பதும், அவ்வாறு காணும் ஈழம், ஈழமாக அல்ல இஸ்ரேலாகத்தான் இருக்குமென்பதையும் மீண்டும்; மீண்டும் சொல்லித் தொலைக்க வேண்டியதாயுள்ளது.

தமிழ் தேசிய வாதத்தில் நோய்க்கூறாகப் பரவிவரும் முஸ்லிம் விரோதப் போக்கானது சிறுபான்மை இனங்களுக்கிடையேயான மோதலில் தனது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளும் சிங்கள பேரினவாத அரசிற்கு சாதகமாக அமைந்து வருகிறது. இது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை இரத்தக் கறை படிந்த வரலாறாக்கியுள்ளது.

இந்த முஸ்லிம் விரோதப் போக்கையும், தமிழ் இனவாதத்தையும் அடியோடு எதிர்க்காதவரை / ஒழிக்காதவரை தமிழ் மக்களின் விடுதலை என்பது திரிசங்கு சொர்க்கமாகத் தானிருக்கப் போகிறது என்பது நிதர்சனமான உண்மை.

மகாவலி கங்கைகரையோரம் கறைபடிந்த கரங்களை எந்தக் கங்கையில் கழுவித் தொலைக்கப் போகிறார்கள்?.

## தமிழர் எதிர்க்கின்றனரே

இலங்கை அரசாங்கத்தின் பாராளுமன்றத்தில் எது நடக்கிறதோ இல்லையோ மாதாமாதம் அவசரகாலச் சட்டத்தை 'இன்னுமொரு மாதத்திற்கு நீடிக்கும்' பிரேரணை கொண்டு வரப்பட்டு, விவாதம் நடத்தப்படுவது மட்டும் ஒழுங்காக நடக்கும். விவாத முடிவில் வழமைபோல வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அது நீடிக்கும் பிரேரணை அமுலாக்கப்படும்.

மாதாமாதம் நீடித்து, அவசரகால நிலையே நாட்டின் நாளாந்த நிலையாகிவிட்ட பின்னரும், அதை நிரந்தரமாக்காமல் மாதாமாதம் ஏன்தான் நீடிக்கிறார்கள், ஏன் வீணாக நேரத்தைச் செலவு செய்து விவாதத்தை நடத்துகிறார்கள் என்ற கேள்விகள் யாருக்கும் எழுவது இயல்பானதே!

றோமன் டச்சுச் சட்டப்படி இலங்கைக் குடிமக்களுக்கு அரசியல் யாப்பு வழங்குகிற ஜனநாயக உரிமையாம் அது.

குடிமக்களுக்கு இதனால் என்ன ஜனநாயகம் கிடைக்கிறது என்பது ஒருபுறமிருக்க, இதுபோன்ற நிரந்தரமான விவாதங்கள் இல்லாவிட்டால் பாராளுமன்றத்தில் பேசுவதற்கு விடயம் இல்லாமல் போய்விடும் என்பது ஒரு முக்கியமான விடயமாகப் படுகிறது.

இம்முறை நடந்த விவாதத்தில் - வழமையாக இந்த விவாதங்களின் போது பல மணியான கருத்துக்கள் கௌரவ உறுப்பினர்களால் தெரிவிக்கப்படுவது இயல்பு. - அமைச்சர் மன்சூர் தெரிவித்த கருத்தொன்று மிக சுவாரஸ்யமிக்கது.

இலங்கைவாழ் சிங்கள மக்கள் அனைவரதும் நாடியைப் பிடித்துப் பரிசோதித்த தோரணையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'வடக்கு கிழக்கு இணைப்பையோ, சமஷ்டி ஆட்சியையோ ஒவ்வொரு சிங்கள மக்களும் எதிர்க்கிறார்கள்....... ஆகவே அது சாத்தியமில்லை ......

தனிநாடு சும்மா ஒரு பகிடிக்காகக் கேட்டது என்று விட்டுவிட்டு தமது 30 ஆண்டுகள் பழைய 'சமஸ்டிக்' கோரிக்கையை திரும்பவும் தமிழரசுக்கட்சி வலியுறுத்தியதற்கு ஒரு பதில் போல இதை அவர் தெரிவித்திருந்தார்.



ஒவ்வொரு சிங்கள மக்களும் எதிர்க்கிறார்கள் என்று என்ன துணிவில் அமைச்சர் சொல்கிறாரோ தெரியவில்லை. பாராளுமன்றத்துக்குள்ளேயே இதை ஆதரிக்கும் சிங்களவர்கள் இருப்பது அமைச்சருக்கு தெரியாமல் போனது ஆச்சரியம்தான்.

போகட்டும். ஒவ்வொரு தமிழரும் ஒற்றை ஆட்சியை எதிர்க்கிறார்களே? இதற்கு அவர் என்ன பதில் சொல்லப் போகிறார்?

'சிங்களவரின் விருப்பம்' தான் தமிழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்க முடியும் என்ற விதியை அமைச்சர், வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளக் கூடும்.

ஆனால் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை - ஒருபோதும்!

இதற்கு எந்தச் சாட்சியும் தேவையில்லை. தன்னைச் சுற்றியுள்ள கட்சிகளைப் பார்த்தாலே அவருக்குப் புரியும்!

## சற்றும் மனந்தளராத

வருகிற டிசம்பர் 31ம் திகதிக்கு முன் 'பாராளுமன்ற தெரிவுக்குழு' ஒரு தீர்வை முன்வைக்காவிட்டால் , அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறி விட வேண்டுமென்று அறிவித்திருக்கிறார் ஸ்ரீகாந்தா! 'ரெலோ'வின் இந்த அறிக்கை பத்திரிகைகளில் வெளியாகியிருந்ததைப் படித்தபோது பிரமிப்பாக இருந்தது.

தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி என்று பழைய கட்சிகள் எல்லாம் பாராளுமன்றத்தில் பேசு பேசென்று பேசி, வட்டமேசைகள், சதுர மேசைகள், சர்வகட்சி மாநாடுகள் நடத்தி ஒரு சுண்டக்காயைக் கூட அசைக்க முடியாமல் போன பின்னும் 'தன் முயற்சியில் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன்' போல திரும்பத் திரும்ப முயற்சி செய்கின்ற தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற முயற்சிகளையிட்டு யாரும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. குறிப்பாக வடக்குக் கிழக்கு மக்கள் தமது நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினையில் இதுபற்றி அக்கறைப்படுவதே இல்லை என்று சொல்லலாம்.

பாராளுமன்ற அங்கத்துவத்தை நியாயப்படுத்த தமிழ்க் கட்சிகளுக்கு இப்போது கிடைத்துள்ளது ஒரு தெரிவுக்குழு. இதை விமரிசித்துக் கொண்டே காலத்தைக் கடத்தலாம் என்பது ஒரு வாய்ப்பாக இருந்தது. இப்போது அதுவும் பொய் என்று பரவலாக அறியப்பட தொடங்கியதும் , இருப்புக்கு காரணம் சொல்ல புதிதாக ஏதாவது தேவைப்படுகிறது போலும்!

பாராளுமன்ற தெரிவுக்குழு போனால் இன்னொரு ஆணைக் குழுவை நியமிக்கவா முடியாது அரசுக்கு?

பாராளுமன்றத்தை நம்பி கெட்டவர்கள் பலர். ஆனால் படித்தவர்கள் யாரும் இல்லை. பாராளுமன்றத்தை நாங்கள் முற்றுமுழுதாக நம்பவில்லை. அது எங்களது மேடை. அதற்கப்பாலும் எங்கள் பணி தொடரும் என்று சொன்ன அமிர் கூட பாராளுமன்றத்துக்கு முஷ்டிச் சண்டை போடாக் குறையாகத்தான் வந்தார்!

பார்ப்போம், ரெலோ என்ன செய்யப் போகிறது என்று.

## பரிசு வேண்டாம்

பிரபல சிங்கள எழுத்தாளரும், தொழிற்சங்க வாதியுமான எச்.ஏ. செனிவிரத்ன, தனது 'பிர்பாவய' என்ற நாவலுக்குக் கிடைத்த சாகித்திய மண்டல விருதையும், ரொக்கப் பரிசான 25,000 ரூபாவையும் நிராகரித்துள்ளார். மகியங்கனையில் ஜனாதிபதி பிரேமதாசாவால் வழங்கப்பட்ட இப்பரிசினை நிராகரித்த செனிவிரத்ன, "அவசரகால விதிகளின்கீழ் ஆட்சி நடத்தும் அரசு தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளை நசுக்கி வருகிறது. சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களின் தொண்டையில் அது கத்தியை வைத்திருக்கிறது. இது மிகவும் மோசமான அடக்குமுறையாகும். இத்தகையதொரு சூழ்நிலையில் இலக்கியம் எப்படி வாழ முடியும்?" என்று தெரிவித்துள்ளார்.

சாகித்திய மண்டல பரிசுபெற்ற தமிழ் எழுத்தாளர்களுக்கு இச்செய்தி சமர்ப்பணம்.

## ஆத்மானந்தம்

உயர்ந்த மலைச்சாரல்களில்
பூத்திருக்கும்
வாசனைமலர்களுடன் கைகுலுக்கு.

வானத்தில் பாடித்திரியும்
பறவைகளுடன் தோழமை கொள்.

அதிகாலைச் சூரியனைப்போல்
ஒளிவிடு.

மலர்த்தோட்டத்து அழகைப்போலும்
மலரிதழில் தூங்கும் பனியைப் போலும்
புன்னகை செய்.

உனை மூடும்
இருளைப் பாராதே
உனக்கு மேலே ஒளிர்கின்ற
நட்சத்திரங்களைப் பார்.

உன்னைச் சூழ,
நீ புரிந்துகொள்ளாத
எத்தனையோ ஒளி;
அர்த்தங்களை அறியாத
எத்தனையோ அழகுகள்!

உலகத்தை அணைத்துக்கொள்
ஒவ்வொரு, இயற்கையின் ரகசியங்களும்
உன்னில் சந்தித்துக்கொள்ளக்
காண்பாய்.

ஆத்மா-
ஒரு சூரியன்
ஒளிக்கீற்றுக்களைக் கொண்ட
அழகான பகற்சூரியன்!

ஆத்மா- ஒரு சோலை
வாசனை மலர்களையும்
பழங்களையும் கொண்ட
அழகான சோலை!

ஆத்மாவின் கானம்
எதிரொலிக்கும் கானம்!
அதற்கு, இசையின் இனிமை
தேவையில்லை!

ஆத்மாவின் ஒளி
மங்கிவிடுவதற்கு முன்னால்,
அதிலிருந்து கிடைப்பவைகளையெல்லாம்
பெற்றுக்கொள்.



அரபுமூலம்: அப்துல் முன்யீம் கன்தீல்
(எகிப்திய புதுக்கவிதையாளர்)
தமிழ்வடிவம்:- எம்.கே. எம் ஷகீப்.

## நன்றிகள்

சுவிற்சலாந்தைச் சேர்ந்த நண்பர் ஒருவர் (இவர் ஒரு சுவிஸ் பிரஜை) சுவிற்சலாந்திலிருந்து வெளியாகும் 'மனிதம்' சஞ்சிகையூடாக 1500 சுவிஸ் பிராங்குகளை சரிநிகருக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்துள்ளார். சரிநிகருக்கான கொம்பியூட்டர் ஒன்றை வாங்க பிரயத்தனம் எடுத்திருக்கும் வேளையில் எதிர்பாராமலே கிடைத்த உதவி இது. நேசத்துடனான இந்தவாறான உதவிகளும், ஆரோக்கியமான அபிப்பிராயங்களும் சரிநிகரின் இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்ல உறுதுணையாய் அமையும்.

இப்பணத்தை அனுப்பி வைத்த சுவிஸ் நண்பருக்கும், அதனை எமக்கு கிடைக்க ஏற்பாடு செய்த 'மனிதம்' சஞ்சிகையினருக்கும் எமது என்றென்றைக்குமான உளப்பூர்வமான நன்றிகள்.



சரிநிகர் மாதம் ஒரு முறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும், பத்திரிகை சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும் இனத்துவ சமத்துவத்திற்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகா நாகரிகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எல்லாவகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்

ஆசிரியர்
'சரிநிகர்'
8, அலோசாலை,
கொழும்பு - 3.

சந்தா:
ஒரு வருடம் :
உள்நாடு 60/-
வெளிநாடு: 15 US $

சந்தாவை காசுக்கட்டளை/ தபாற்கட்டளை/ காசோலை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# தற்கொலைக் கொலையாளிகள்

சசி பௌலேமி



விடுதலைப் புலிகளின் பெண்கள் அங்கத்துவ எண்ணிக்கை கணிசமானது. இராணுவம், மருத்துவம், பிரசாரம், மாணவர் பிரிவு முதலிய யாவற்றிலும் (ஆண் தலைமையில்) அவர்கள் குறிப்பிடத்தக்க பணிஆற்றியுள்ளனர். இதன் மூலம் இயக்கத்தின் பலத்தை அதிகரித்துள்ளனர். (ஆனால் அவர்களின் பணி சரியானபடி கௌரவிக்கப்படவில்லை. 'எமது இயக்கத்தில் ஆணும் பெண்ணும் சமம்' என வசனம் பேசினாலும் நடைமுறை அவ்வாறாக இல்லை. பெண்களது பல வருட கால தீவிரமான பங்கு பற்றுதல், தியாகங்கள் ஆகியவற்றின் பின்னர் கூட விடுதலைப்புலிகளின் உயர்மட்டக்குழுவில் ஒரு பெண்ணும் இடம் பெறவில்லை. அரசியற்பிரிவான விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் உபசெயலாளராகவிருந்து இறந்துபோன மேஜர் சுந்தரியின் இடத்திற்கு மீண்டும் ஒரு பெண்ணும் நியமிக்கப்படவில்லை.)

இத்தகவல்களின் பின்னணியிலேயே 'தற்கொலைக் கொலையாளிகள்' என்ற வீடியோ நிகழ்வில் நான் மேலே குறிப்பிட்ட காட்சிகளினூடு பொதிந்துள்ள கருத்துநிலையை ஆராய்தல் வேண்டும். ஏனெனில் தேர்ந்து கொடுக்கப்பட்ட இக்காட்சிகளில் வெளிப்படும் செய்தி அலட்சியப்படுத்த முடியாதது. பெண்விடுதலையாளர்களின் கவனத்துக்கு உரியது.

அன்ரன் பாலசிங்கம் தமிழ் ஈழப்போராட்டம் பற்றி விளக்கும் அரசியல் வகுப்பொன்றில் பங்கெடுக்கும் போராளிகளில் ஆண்களுடன் பெண்களும் காணப்படுகின்றனர். ஆனால் ஒரு தாக்குதலை நடத்துவது எவ்வாறு எனக் கற்பிக்கப்படும் இராணுவக் கல்விவகுப்பில் யாவரும் ஆண்களாகவே உள்ளனர். இது தவிர பி.பி.ஸி கமராக்கு முவிற்காகப் புனையப்பட்ட ஒரு போலித்தாக்குதல் நிகழ்ச்சியின் போதும் ஒரு பெண் போராளியும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இன்னோர் காட்சி; புலிகளின் முகாம் ஒன்று; யாவரும் ஆண்போராளிகள்; திடீரென வான்தாக்குதல், அதனை அவர்கள் எதிர் கொள்கின்றனர். எதிர்த்தாக்குதலுக்குத் தயாராகின்றனர். கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஒரு படையணி புறப்படுகிறது. மீண்டும் அனைவரும் ஆண்கள். இக் காட்சியின் இறுதியில் உணவு மூட்டைகளைச் சுமந்தபடி களைத்த தோற்றத்துடன் சில பெண் போராளிகள் வருகின்றனர்.

போராட்டத்தில் பெண்கள் துணைப்பாத்திரங்களாகவே நோக்கப்படுவதை இக் காட்சி சித்திரிக்கிறது. போராட்டத்தின் அச்சாணியான, வலிமையின் குறியீடான ஆயுதப் போராட்டத்திலன்றி, அந்தப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு (ஆண் போராளிகளுக்கு) தேவையான உணவைச் சுமந்து வருபவர்களாக (கவனிக்கவும்; பங்கிடுபவர்களாகவும் அல்ல) பெண்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர். இன்னொருவகையில் கூறினால் புலிகள் இயக்கத்தினரின் பெண்கள் பற்றிய கருத்துநிலை மரபுரீதியானதாகவே, இன்னும் அமைந்துள்ளதையும் இக்காட்சி விபரிக்கிறது. ஆயுதத்தைக் கையில் ஏந்திய ஆண், உணவைச் சுமந்து வரும் பெண் ஆகிய இவ் விரு படிமங்களும் பாரம்பரியமான ஆண் பெண் வேலைப்பிரிவினை (Sexual division of labour Man the hunter women the gather)கருத்தோட்டத்தையே பிரதிபலிக்கின்றன.

'சமத்துவம்' என்பது வசன வடிவம் மாத்திரமே; ஆனால் இக் காட்சிகளை ஒழுங்கு செய்தவர்களின் ஆழ் உணர்விலோ, கருத்து நிலையிலோ பெண்களின் முக்கியத்துவம் பதிந்திருக்கவில்லை என்பதே. நடைமுறையில் பெண்களின் பங்கு இருந்தும் கூட கருத்து நிலையில் அது உருவாகவில்லை; பிரதிபலிக்கவில்லை. எதிர்பாராத வகையில் தம்மிடமிருந்து மேற்கிளம்பும் இக்கருத்து நிலை வெளிப்பாட்டை விடுதலைப்புலிகளே எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். (1991 ஜூன் நடுப்பகுதியில் விடுதலைப்புலிகள் நடத்திய முத்தமிழ் விழாவில் 'மாமனிதர் கௌரவிப்பு' நடைபெற்றது. பிரபாகரனே - பிரபாகரனது இரண்டாவது பொது நிகழ்ச்சிப் பங்குபற்றுதல் இது. இவ் வகையில் மிக முக்கியமானது. - மாமனிதர்களான பத்து ஆண்களுக்குப் பரிசு வழங்கினார். பெண்கள் எவரும் மாமனிதர் ஆகும் தகுதி பெறவில்லை போலும்!)

தாக்குதலில் பெண்கள் பங்குபற்றுவது காட்டப்படவில்லை. ஆனால் காயமடைந்த அங்கங்களை இழந்த பெண் போராளிகள் காட்டப்படுகின்றனர். இக்காட்சிகள் மிக முக்கியமானவை. இருவகையில் ;ஒன்று காயம் பட்ட பெண்ணுக்கு ஒரு ஆண் போராளி சிகிச்சை அளிக்கிறார். விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவில் திறமைசாலிகளான பெண்கள் உள்ளனர். எனினும் ஆணே சிகிச்சையாளனாகக் காட்டப்படுவது ஏன்? பெண்நோயாளி ஆண்மருத்துவர் என்ற மரபு ரீதியான படிமத்தின் மீள் உருவாக்கமா இது? மற்றது, அங்கவீனரான பெண் போராளி இரு கைகளை இழந்த இளம் பெண்; அவளுக்கு உணவூட்டும் இன்னோர் பெண்; 'எனது கைகளை இழந்தது பற்றிக் கவலையில்லை; தேசவிடுதலைக்காகப் போரிட்டேன்; தொடர்ந்தும் என்னாலானதைச் செய்ய முயல்வேன்' என உணர்ச்சியற்ற குரலில் கூறிவிட்டு அவள் எழுந்து போகிறாள். கமரா பின்பக்கத்திலிருந்து கைகளற்ற தோளின் மேலாகத் தொங்கும் சேட்டின் துணிக்கைகள் அசைய அவள் மெதுவாக நடந்து செல்வதைக் காட்டுகிறது. விடுதலைப் புலிகள் எதிர்பார்த்த அனுதாபத்தைக் கிளப்புவதற்கு இந்தக் காட்சி உதவும்.

கை, கால்களை இழந்து அங்கவீனரானோர் பெண்களிலும் ஆண்களே அதிகம். அப்படியிருக்க ஏன் ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்தனர்? தமிழ்ச் சமூகம் ஆணைப் பாதுகாவலனாக, சகலவலிமையும் பொருந்தியவனாகவே எதிர்பார்க்கிறது. பூரித்த தோள்கள் கொண்ட, உடற்குறையும் நலிவும் அற்ற ஆண் உருவம் இலட்சிய பூர்வமான ஆண்மையின் சான்றாகும். அங்கவீனர்களான ஆண்கள் இந்த இலட்சியப் படிமத்துடன் பொருந்தமாட்டார்கள். அது மாத்திரமன்று; அவர்கள் திரையில் காட்சிப்படுத்துவதை தமிழ்ச்சமூகத்தின் ஆண் கௌரவம் ,பெருமை (male pride) சகித்துக் கொள்ளாது. ஆண் உளவியல் அதனை ஏற்காது; அதனால் பாதிக்கப்பெறும்.

ஆனால், பெண்; பாவம் பேதை, எவ்வளவு தான் உயரப் பறந்தாலும் பருந்தாக முடியாத குருவி. இரக்கத்திற்கும் அனுதாபத்திற்கும் உரிய பொருளாவது மிகப் பொருத்தமானதாகவே தோன்றியிருக்கலாம். இவ்வகையில் முன்னர் நான் கூறிய புனைவுத் தாக்குதல் காட்சியும் இந்தக் காட்சியும் ஒன்றுக்கொன்று எதிர்நிலைக்காட்சிகளாகும். விடுதலைப்புலிகளின் கருத்துநிலை யதார்த்தத்தை நன்கு வெளிப்படுத்துவனவாகும்.

இவ்வீடியோவில் யாழ் நகரின் சில பகுதிகள் படமாக்கப்பட்டுள்ளன. இடிந்த கட்டிடங்கள், அவசரமாக விரையும் மனிதர்கள், பாடசாலை செல்லும் மாணவிகள், தாக்குதல் நடத்தும் விமானம் என்று யாழ்ப்பாணத்தின் போர்க்கால வாழ்வின் வெட்டுமுகத் தோற்றத்தைக் காட்சிகளாக்கியபோது, நகரின் சுவர்களில் இறந்த போராளிகளின் படங்கள் ஒட்டப்பட்டிருப்பதையும் கமரா காட்டுகிறது. கமராவின் கண்களுள் பெண்களின் படங்கள் எதுவும் அகப்படும்படியாக இல்லை. கணிசமான பெண்கள் இறந்தபின்பும் மேல்மட்டத்தில் தெரிவதெல்லாம் ஆண்களின் பிம்பங்களே. (வீடியோ நிகழ்வின் காட்சியொன்றில் இறந்த பெண்ணொருத்தி புதைக்கப்படுவது காட்டப்படுகிறது. விடுதலைப்புலிகளின் வரலாறு எழுதப்படும் போது பெண்களின் பணியும் பங்கும் புதையுண்டு போகுமோ?)

போராளிகளல்லாத வேறு மூன்று பெண்கள் இந்நிகழ்ச்சியில் இடம் பெறுகின்றனர். ஒரு பெண், போராட்டத்தில் உயிர் நீத்த தனது புதல்வனைப் பற்றிப் பெருமையாகப் பேசுகிறாள். மீண்டும் இங்கே அழுத்தம் வீரப்புதல்வர்களுக்கே அளிக்கப்படுகிறது. புதல்வியருக்கும் புதல்வியரின் அன்னையருக்கும் அளிக்கப்படும் அந்தஸ்து என்ன என்ற வினா இவ்விடத்தில் எழுவதைத் தவிர்க்க இயலாது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் ஒரு பெண் போராளியின் மரணச்சடங்கில் சோகம் தாங்காது அழுகின்ற அவளது தந்தையை அழாதே என அதட்டும் ஒரு பெண்; மிகச் செயற்கையான இந்தக் காட்சி பெண்களது மனவலிமையைக் காட்டுவதாகக் கருதி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இன்னொரு பெண்- திருநீறு பூசி சந்தனக் குங்குமப் பொட்டிட்டு, பட்டுச்சேலை கட்டி சைவத் தமிழ்ப் பெண்ணின் குறியீடு போலத் தோன்றி இலங்கை அரசின் அநீதி பற்றியும், விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு மக்கள் அளிக்கும் ஆதரவு பற்றியும் பேசுகிறார்.

இந்த மூன்று பெண்களும் வயது முதிர்ந்த பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வயது முதிர்ந்த பெண்கள் தமிழ்க் கலாசாரத்தில் அன்னை ஸ்தானத்தை அடைந்தவர்கள். அவ்வகையில் பழைய 'வீரத்தாய்' பிம்பமே இங்கு மறு அமைப்புப் பெறுகிறது. தாய் என்ற பாத்திரத்தைப் பயன்படுத்துவது சில சமயம் தவிர்க்க முடியாமல் போனபோதும் (அன்னையர் முன்னணி அமைப்புகள் 84 இல் வடக்கிலும் 91 இல் தெற்கிலும் தோன்றிய பின்னணியை இங்கு கவனிக்கலாம்) பெண்களுடைய விடுதலை முன்னேற்றம் ஆகியவற்றைப் பொறுத்தளவில் அது அவர்களது எல்லைகளைக் குறுக்குவதாகவே அமையும். சமூகத் தாய்மை (Social Motherhood 'Combative Motherhood' as Molyneive says) அல்லது இயற்கைத் தாய்மை எதுவாயினும் அதற்கு சில குறிப்பிட்ட குணாம்சங்கள் அளிக்கப்படுகின்றன. தன்னலமின்மை, தியாகம், பாதுகாப்பு அளித்தல் போன்ற இத்தக்குணாம்சங்கள் பெண்களது மரபுரீதியான ஸ்தானத்தையே மீண்டும் உறுதிப்படுத்துவனவாக அமைந்துவிடும். எனவே புலிகள் அளிக்கின்ற இத் 'தாய்' படிமம் பற்றி நாம் அக்கறை கொள்ளுதல் வேண்டும்.

இவ்வீடியோ நிகழ்ச்சியில் பிரச்சினையைக் கிளப்புகிற இன்னோர் காட்சி திருமதி. அடேல் பாலசிங்கம் தோன்றுவதாகும். பெண்களின் சமத்துவ நிலை பற்றிய வசனம் ஒரு வெளிநாட்டு வெள்ளைக்காரப் பெண்ணின் (இந்த மொழிக்கையாளுகையை சர்வதேச பெண்நிலைச் சகோதரிகள் மன்னிப்பார்களாக!) வாக்குமூலமாகவே இடம்பெறுவது ஏன்? அடேலை ஒரு பெண் போராளி பெண்களின் முகாமொன்றுக்கு கூட்டி வருகிறார். இருவரும் அருகருகாகவே நிற்கின்றனர். எனினும் அடேலுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அடேலின் போராட்ட ஈடுபாடு பற்றி நாம் சந்தேகம் கொள்ளவில்லை. ஆனால் பல்கலைக்கழக விரிவுரையாளராகப் பணிபுரிந்த பேச்சாற்றல் உள்ள ஜெயா பெரும்பாலும் வாய்திறவாமல் இருக்க வெளிநாட்டுப் பெண்ணாகிய அடேல் கதைப்பதேன்? விடுதலைப் புலிகளுடைய முக்கியமான கருத்துகளைத் தெரிவிப்பவர்களாக பிரபாகரன், யோகி, மாத்தையா, பாலசிங்கம் ஆகிய ஆண்களுடன் சமத்துவமாக இந்நிகழ்ச்சியில் கருத்துத் தெரிவிப்பது பெண்களுள் அடேல்தான். அவரை ஆண் தலைவர்களின் அந்தஸ்துக்கு உயர்த்தியதற்கு அவரது நிறம், இனம் காரணமாகினவா என்பது சுவையான வினாவாகும். ஏகாதிபத்தியத்தின் சின்னம் என்று யாழ்ப்பாணக் கோட்டையைத் தகர்க்க முனைந்த விடுதலைப்புலிகளது உளவியல் அவர்களை அறியாமலே Clonized ஆக இருப்பதை இது காட்டுகிறதா?

ஆயுதந்தாங்கிய இயக்க அங்கத்தவர்களை 'பெடியன்கள்' என்றே யாழ்ப்பாண மொழிவழக்கு குறிப்பிட்டு வந்துள்ளது. கணிசமான அளவு பெண்கள் இயக்கத்தில் சேர்ந்தபின்பும், ஆயுதந்தாங்கிய பெண்கள் பஜிரோ ஜீப்புகளைச் செலுத்துவதும், சைக்கிளில் வலம் வருவதும், கால்நடையாக ரோந்து செல்வதும் சாதாரணமான அன்றாடக் காட்சியாகிவிட்ட போதும் 'பெடியன்கள்' என்ற மொழிவழக்கு மாறவில்லை. அவ் வகையில் போராட்டமும் இயக்கமும் ஆண்மைப்படுத்தப்பட்டதாகவே யாழ்ப்பாணத்து பொதுசன உளவியலிலும் கருத்துநிலையிலும் உருவாகியுள்ளது.

→ பார்க்க பக்கம் 4

நன்றி - நூலகத்திட்டம்



# இன்றைய யாழ்ப்பாணத்தில் கலை

**கலாநிதி ஆ. கிருஷ்ணதுரை**

**"பூபாளம் பாடும் நேரம் - மக்கள்**
**புலியாகிப் போராடும் காலம்**
**போராடும் காலம் புலியாகும் நேரம் - இது**
**பூகம்பம் எழுகின்ற தேசம்"**

பூகம்பம் எழுகின்ற தேசத்தில், யாவரும் புலியாகிப் போராட வேண்டும் என்பது யாழ்ப்பாணத்தில் கட்டளை. இந்நிலை கலை, இலக்கியவாதிகளுக்கும் பொருந்தும். புலிகள் ஒன்றில் கவனமாக இருந்தார்கள். தமக்குச் சார்பற்ற கருத்துக்கள் எவ்வகையிலும் வெளி வராதிருப்பதை உறுதிப் படுத்தினார்கள். யாழ்ப்பாணப் பத்திரிகைகளின் தலையங்கங்கள் கூட புலிகள் - அரசு பேச்சு வார்த்தை என்றோ, புலிகள் - தொண்டமான் பேச்சு வார்த்தை என்றோ தான் அமைவதுண்டு. (கவனிக்க : அரசு - புலிகள் என்றோ, தொண்டமான் - புலிகள் என்றோ அல்ல) ஒரு முறை காரைநகரில் ஸ்ரீலங்கா இராணுவம் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் முன்னேறியிருந்தது. 'உதயன்' பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டிருந்தது. "ஸ்ரீ லங்கா இராணுவம் காரைநகரில் ஒரு மைல் முன்னேற்றம்". அடுத்த நாள் புலிகளிடமிருந்து உதயன் பத்திரிகை ஆசிரியருக்கு அழைப்பு, "நீ என்ன மீற்றர் வைத்தா அளந்து பார்த்தாய்? இனிமேல் நாங்கள் தருகிற செய்தியைத்தான் போட வேண்டும்" இது யாழ்ப்பாணத்தில் உலாவுகிற கதை.

யாழ்ப்பாணத்தில் வெளிவருகிற நான்கு தினசரிகளின் செய்திகளுக்கும் புலிகளின் குரல் (உறுமல்) செய்திகளுக்கும் ஒரு வித்தியாசமும் கிடையாது.

இதனை ஏன் எழுதுகிறேன் எனில், பத்திரிகைகளுக்கே இந்நிலையானால் இலக்கியவாதிகள் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அராஜகம், ஜனநாயக மறுப்பு, கருத்துச் சுதந்திரமின்மை உள்ள சூழலில் இலக்கியம் படைக்கப்படுவதில்லை; 'பண்ண'ப் படுகிறது.

யாழ்ப்பாணம் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது. ஒரு வசதியும் கிடையாது. ஆயினும் பெரும்பாலான மக்கள் யாழ்ப்பாணத்தில் வாழ விரும்புகிறார்கள். இருபக்கத்து (புலிகள் - அரசு) அட்டூழியங்களுக்கிடையில் படைப்பாளி நசிகிறான். 'விருத்தெரிந்த' நாள் முதல் போராட்டத்துடனும், இலக்கியத்துடனும், தேடலுடனும் தன்னைப் பிணைத்துக் கொண்ட செல்வி எனும் படைப்பாளி புலிகளின் சிறைக்குள். பத்திரிகையாளர் சண்முகலிங்கம் புலிகளினால் கொல்லப்பட்டார். இலங்கை அரசு நெல்லை க. பேரனை குடும்பத்துடன் காவு கொண்டது.

புலிகள் ஒன்றை மறந்து விட்டார்கள். அல்லது மறுத்து விட்டார்கள். வடக்க கிழக்கு மண்ணில் தேசிய விடுதலைக்கான போர் நடைபெறுகிறது. இப்போராட்டத்தை ஆதரிக்கும் (விமர்சனத்துடன்) பல படைப்பாளிகள் உள்ளனர். இப் போராட்டத்தை ஆதரிப்பதென்பது புலிகளின் அங்கத்தவனாக இருக்க வேண்டும் எனும் அர்த்தத்தைக் கொள்ள மாட்டாது. ஆனால் புலிகள் அவ்வாறு எதிர்பார்க்கிறார்கள். "நாங்கள் தமிழ் பேசும் மக்கள். ஆனால் புலிகள் அல்ல" என்பது புலிகளினால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாதது. சுயமான படைப்பாளியினால் புலிகள் பற்றிய விமர்சனத்துடன் தான் இப்போராட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியும். இப் போராட்டத்தை ஏற்காத படைப்பாளியும் இருப்பதற்கான, படைப்பதற்கான சுதந்திரம் வேண்டும். இவை யாவும் மறுக்கப்பட்ட நிலையில் படைப்பாளிகள் பலர் யாழ்ப்பாணத்தை விட்டு ஓடுகின்றனர். படைப்பாளிகள் சிலர் இலக்கியத்தைப் படைத்துவிட்டு அதனை ஒளிப்பதற்கு இடம் தேடுகின்றனர். (கறையானுக்கு இரையாக்குபவர்களும் உண்டு) படைப்பாளிகள் சிலரின் பேனா நீண்டநாட்கள் மௌனமாக ஓய்வெடுக்கிறது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் மிகச் சிலர் எழுதுகிறார்கள்.

இலங்கை அரசு 'ஈழநாடு' கந்தசாமியைக் கைது செய்தபோது 'விடுதலை செய்' என்றுதான் மாத்திரமே கத்துகிறேன் என்று கத்தியவரான அலை யேசுராசா இப்பொழுது சண்முகலிங்கம் கொல்லப்பட்டபோதும் செல்வி கைது செய்யப்பட்ட போதும், எழுத்தாளர்கள் மௌனமாக்கப்பட்ட போதும் மிக நீண்ட மௌனம் கொள்கிறார். யாழ்ப்பாணத்தில் அதுதான் சாத்தியம். ஆனால் யேசுராசாவும் மு. பொன்னம்பலமும் நடத்திய 'திசை' எனும் பத்திரிகை தடை செய்யப் பட்டது. முன்னர் ஒருமுறை எழுத்தாளர், கலைஞர் சந்திப்பில் பிரபாகரன் 'திசை எங்கள் பத்திரிகை' என்று குறிப்பிட்டதை 'ஆனையில் ஏறிய புளுகத்துடன்' சொல்லித் திரிந்தவர்களுக்கு இத்தடை அதிர்ச்சி ஆயினும், 'புறங்கையால் மண்ணைத் தட்டிவிட்டு இப்பொழுது புலிகளின் பாசறைக்குள் சுகமாகத் துயில்கிறார்கள். (மேலும் விபரம் எழுத விருப்பமில்லை) ரஷ்யாவில் ஸ்டாலின் எழுத்தாளர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி விட்டார். படைப்பாளிகளைக் கொன்றார் என பிலாக்கணம் வைத்து ஊரைக் கூட்டிய யேசுராசா அவர்கள் இன்று அமைதியாகி விட்டாரா? அல்லது புலிகளை நியாயப்படுத்துகிறாரா? ஜோர்ஜ் ஒவெல்லின் 'விலங்குப்பண்ணை', '1984' நாவல்களைச் சிலாகித்தவர், இன்று அதேபோல யாழ்ப்பாணம் இருக்க, என்ன சொல்லப்போகின்றார்? இப்பொழுது புலிகளுக்குச் சாமரம் வீசுகின்றார். தெரிகிறது. யேசுராசா யாரென்று இப்பொழுது நன்றாகத் தெரிகிறது.

மற்றவர் மு. பொன்னம்பலம். அண்ணனுக்காக (மு.தளையசிங்கம்) நாடு முழுவதிலும், படைப்புகள் யாவற்றிலும் 'மெய்யுள்' தேடியவர். ஒரு படைப்பை ஒரு தட்டிலும், மறுதட்டில் மெய்யுள், ஆத்மார்த்தம், பரிபூரணம், விடுதலை, உள்ஒளி என்பவற்றையும் இடுவார். ஒரு போதும் இவர் தராசு சமப்பட்டதில்லை. சுந்தர ராமசாமியின் ஜே.ஜே. சில குறிப்புகளுக்குக்கூட அதே கதிதான். மு.த.வின் சீடப்பிள்ளை கவிஞர் சு. வில்வரத்தினத்தின் படைப்புத்தான் ஒருமுறை சமப்பட்டதாக ஞாபகம். இவர் மெய்யுள், ஆத்மார்த்தம், உள்ஒளி யாவற்றையும் இப்பொழுது புலிகளின் ஏ.கே. 47இல் தேடிக்கொண்டிருக்கிறார் போல் தெரிகிறது. ஒருமுறை 'ஈழநாதம்' பத்திரிகையையே புலிகளைப் பற்றி 'ஆழமாக 'எழுதவில்லை என விமர்சித்திருந்தார். இவருக்கு முக்கிய ஆசிரியர் பதவி கொடுக்க இருந்த சமயத்தில் இவ்வாறு விமர்சித்து உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன் என்கிற நிலை ஆயிற்று.

இன்னொருவர் 'பழம்பெரும்' மார்க்சிஸ்ட் மாவோயிஸ்ட் முருகையன். எண்பதுகளுக்கு முன்னர் இலக்கியத்தில் மார்க்சீயத் தீவிர முகம் காட்டியவர். பின்னர் நீர்வேலிக் கந்தனுக்கு வெண்பா ஒன்று பாடினார். தற்போது பிரபாகரன் பிள்ளைத்தமிழ் பாடுவது குறித்து ஆராய்ச்சி செய்கிறார் போலும். அப்பிரபந்தம் சில வேளைகளில் நிலைமையை உத்தேசித்து 'பிரபாகரச் சோழனுலா' வாகவோ மாங்குளப் பரணியாகவோ மாறும் சாத்தியம் உண்டு. அப்படி ஆகும் பட்சத்தில் புதுவை இரத்தினதுரைக்கு அடுத்து ஆஸ்தான கவிஞராகும் வாய்ப்பு முருகையனுக்கு உண்டு.

புலிகளுக்கு மிக நெருங்கி நிற்பது யார் என்பது குறித்து, முருகையன் குழுவினர் ஒரு பக்கமாகவும் , யேசுராசா குழுவினர் மறுபக்கமாகவும் நின்று கயிறிழுக்கிறார்கள். யேசுராசாவிற்கு முருகையனை தாக்க நிறைய சந்தர்ப்பங்கள் . முருகையன் மார்க்சிஸ்ட் என்று சொல்லப்படுபவர். போதாக் குறைக்கு சீனாவும், செக்கோசிலவாக்கியாவும் இலங்கை அரச படைகளுக்கு ஆயுதங்கள் வழங்குகின்றன. இவை போதும் முருகையனை 'நொக் அவுட்' ஆக்குவதற்கு. முருகையன் தன் பதவியின் அந்தஸ்த்தினாலும் புதுவை இரத்தின துரையுடனான உறவின் பலத்தினாலும் தாக்குப் பிடிக்கிறார்.

ஒருபோதும் நல்ல படைப்பினைத் தாரமுடியாத இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் புலிகளின் ஆஸ்தான எழுத்தாளர் 'சார்ந்ததன் வண்ணமாக' மாறும் இயல்பினர். புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் 'வெளிச்சம்' சஞ்சிகையின் தொகுப்பாளர்.

தன் அனுபவத்தை மட்டும் எழுதுகிற சாந்தனின் அனுபவங்கள் இப்போது புலிகளின் அனுபவங்களாக மாறி விட்டன. எந்தக் காயை எப்படி நகர்த்தினால் எதிராளி விழுவான் எனும் கலை இவருக்கு கைவந்தது. (அது புலிகளிடம் செல்லுபடியற்றுப் போக, அதுவும் போச்சு அரகரா, செம்பும் போச்சு சிவசிவா எனும் நிலை வராது பார்த்துக் கொள்கிறார்.)

யாழ்ப்பாணம் எரிவதை, நூலகம் எரிவதை, வியாபாரம் ஆக்கிய செங்கை ஆழியான் மக்கள் எரிவதை வைத்துக் காசு பண்ணுகிறார். புலிகளுக்கும் இது பிடித்துப் போகிறது. இருவரும் சேர்ந்து நல்ல வியாபாரம்.

இவர்களுக்கு மேலாக தலைவராக புதுவை இரத்தினதுரை உள்ளார்.

**"மாத்தறையில் பொடிமெனிக்கா துவக்கெடுப்பாள்**
**மாதகலில் கந்தையா பொல்லெடுப்பான்**
**நாத்தாண்டியாவில் காசிம் லெப்பை**
**நாருரிக்கும் கத்தியினைக் கரமெடுப்பான்"**

என ஐக்கிய இலங்கைப் புரட்சி பற்றிக் கனவு கண்டவர். இவரது தீர்க்க தரிசனமோ என்னவோ, இப்பொழுது மாத்தறையில் அல்ல, மாதகலில் பொடிமெனிக்கா துவக்கெடுக்கிறான். புலிகளுக்குப் பயந்து மாத்தறையில் கந்தையா ஒளித்திருக்கிறான். புலிகளினால் நாத்தாண்டியாவிலிருந்து காசிம் லெப்பை நாயாய் விரட்டப் பட்டிருக்கிறான்.

இவர்களையும் மீறி யாழ்ப்பாணத்தில் இலக்கியம் வாழவில்லை. இப்பொழுது யாழ்ப்பாணம் அதன் எழுத்து புலிகளுக்கு எவ்வாறு அடிபணிந்து எழுதுவது என்பது பற்றிச் சிந்திக்கிறது.

யாழ்ப்பாணத்து இலக்கியம் இவ்வளவுதான். இதில் சட்டநாதன் போன்ற புறநடைகளைத் தவிருங்கள். செங்கை ஆழியான் போன்ற பச்சோந்திகளைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

# ஒரு வார்த்தை எழுத விடு

## மறுபக்கம்

தனக்குள் அடிக்கடி முணுமுணுத்துச் சிரித்துக் கொள்கிற கிழவன். நிஜ உலகம் மறந்து போய் விட்டது. கடந்த கால நினைவு கொள்ளலில் சஞ்சரிக்கிறார். வேலை பார்க்கிற மகன் வந்தபோது ''யார் இந்தத் தடியன் '' என த் தனக்குள் மறுகுகிறார். ஐந்து வயதில் ஆற்றில் குளித்து, குளிரில் வெடவெடுத்து, மந்திரம் முணுமுணுக்குகிற அம்பிதான் அவர் ஞாபகம். **'மறுபக்கம்'** எனும் திரைப்படம் இது. இச் சினிமாவுக்கு, இந்தியாவின் மிகச் சிறந்த திரைப்படத்துக்கான விருது கிடைத்துள்ளது. இந்தியாவில் விருதுகளுக்கான அர்த்தம் அடிக்கடி கேள்விக்குள்ளாவதுண்டு. 'மறுபக்கம் ' சினிமாவுக்கு விருது கிடைத்த போது இத்தகைய கேள்வி எழுந்தது. இந்திரா பார்த்த சாரதியின் உச்சி வெயில் 'குறு நாவல்' சிவகுமார் முக்கிய பாத்திரமேற்று நடிக்க, **கே.எல். சேதுமாதவனின்** நெறியாள்கையில் 'மறுபக்கம்' ஆனது. சிவகுமார் தமிழ்ச் சினிமா நடிப்பைக் கொஞ்சம் மறந்து நடித்தார். இது சராசரிக்கும் சற்றுவேறுபட்ட சினிமா. ஆனால் இதுவரை இவ்விருதினைப் பெற்ற ஏனைய மொழிச் சினிமாக்களான சாருலதா, செம்மீன், கொடியேற்றம், சிதம்பரம், அர்த் சத்யா, பிறவி போன்ற திரைப்படங்களுடன் ஒப்பிடும் போது இதில் ஒன்றுமில்லை. அல்லது தமிழில் நல்ல சினிமாக்கள் என்று சொல்லத்தக்க உன்னைப்போல் ஒருவன், திக்கற்றபார்வதி அக்ரஹாரத்தில் கழுதை, குடிசை, அவள் அப்படித்தான், உதிரிப்பூக்கள், பூட்டாத பூட்டுக்கள், வீடு, சந்தியா ராகம் போன்ற சினிமாக்களுடன் ஒப்பிடும்போது கூட இதில் ஒன்றுமில்லை.

## மக்கத்துச்சால்வை

பல நல்ல கதைகள் கொண்ட தொகுதி **'மக்கத்துச் சால்வை' எஸ்.எல்.எம், ஹனிபா** எழுதியிருந்தார். எஸ்.பொ.வின் அழகான முன்னீடு. ஒரு கதையிலும் ஹனிபாவைத் தெரியவில்லை. இதுதான் இத்தொகுப்பின் மிகப் பெரிய பலம். பல்வேறு பாத்திரங்கள், அவை நடமாடுகிற பல்வேறு தளங்கள், அவை சொல்கிற பல்வேறு செய்திகள் . யாவற்றிலும் 'மனிதம்' மிளிர்கின்றது. 1967 இலிருந்து 1991 வரை எழுதிய கதைகள் இத் தொகுப்பில் அடக்கம். ஆனால் 67 இற்கும் 91 இற்கும் வித்தியாசம் தெரியவில்லை. சீரான நடை, தளங்கள் பாத்திரங்கள் வேறுபட்டன எனினும், அதற்குப் காலம் காரணமல்ல. 78இல் விசுவாசமில்லா மனைவி 'வேட்டை' கதையில் வருகிறாள். கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட பருவ வயதை எட்டிப் பிடிக்கும் பேதை 67இன் 'பொம்மைகள்' இல் வருகிறாள். மக்கத்துச் சால்வை, மருத்துவம், மருமக்கள் தாயம், மூன்றும் 91 இல் எழுதப்பட்டவை. 'மக்கத்துச் சால்வை' மனிதர்களைக் காட்டுகிறது. மருத்துவம், மருமக்கள் தாயம் இரண்டும் இக்காலத்து அரசியலை வெளிப்படுத்துகின்றன. பிள்ளைப் பேற்றுக்கு தாய் கஷ்டப்படுகிறாள். ''அவசரமா ஆஸ்பத்திரிக்கு கொண்டு போ. எம்.ஓ. கிட்ட காட்டினாத்தான் நல்லது''. ''அங்கை ஆரு போற. அது தமிழன்ட ஆஸ்பத்திரி. எல்லாம் புலிகள். இவருக்கு இதெல்லாம் தெரியாது'' யதார்த்தத்தைச் சொல்லுகிற, ஊசியாகக் குத்துகிற வரிகள். பிரச்சாரம் கிடையாது. கலாபூர்வ வெளிப்பாடு. இவை இத்தொகுப்பை உயரத்தில் வைக்கப்போதுமானது.

## மனக்குறுக்கம்

மனைவிக்குச் சுகவீனம். மருத்துவ மனைக்குக் கூட்டிச் சென்றேன். அருகில் முஸ்லிம் தாயும் மகளும் இருந்தனர். மகள் பக்கத்தில் சொல்லிக்கொண்டிருந்தார். ''யாழ்ப்பாணத்தை உட்டு நம்மளை போகச் சொன்னாங்க. ஒண்ணும் எடுக்க விடேல்ல. எல்லாம் அப்பிடியே. உம்மா மயங்கி விழுந்தா. அதுக்குப் பிறகுதான் இப்பிடி. ஒண்ணும் பேசுகிறா இல்லே. கடேசியா இவரிட்டையும் காட்டுவமின்னு....'' நான் கூச்சத்தில் நெளிந்தேன். நெருப்பில் நின்றிருந்தேன். மனைவியின் நெற்றியில் பிரகாசித்த குங்குமத்தை துடைத்துவிட கைகள் அவசரப்பட்டன.

''தமிழன் என்று சொல்லடா

தலை நிமிர்ந்து நில்லடா''

சூர்யா

## தற்கொலைக்...

இயக்கத்திற்குள் முக்கியமான பணிகளை ஆற்றியிருந்தும், பல தியாகங்களைச் செய்திருந்தும் பெண்களினுடைய பங்கும் ஆற்றலும் போதியளவு கௌரவிக்கப்படவில்லை என்பது மாத்திரமல்ல; விடுதலைப் புலிகளின் நினைவாற்றலும் (Memory) உளவியலும், கருத்துநிலையும் ஆண்நிலைப்பட்டதாகவே உள்ளது. பெண்களையும் 'பெடியன்களாகவே ' காணுகின்ற காட்சிப்படுத்துகின்ற நிலை அது. தற்கொலைக் கொலையாளிகள் இதனைத் துல்லியமாகவே படம் பிடித்துள்ளது.

ஒரு குறிப்பு: 'தற்கொலைக் கொலையாளிகள்' இன் கட்டுரையாளரது பெயர் சசி பௌலேமி. கடந்த இதழில் சி. பௌலேமி என வெளியாகியிருந்தது. தவறுக்கு வருந்துகிறோம்.'

இக் கட்டுரை ஏககாலத்தில் சரிநிகரிலும் ஜேர்மனியிலிருந்து வெளிவரும் தூண்டில் சஞ்சிகையிலும் பிரசுரமாகியுள்ளது. கட்டுரையாளர்கள் கட்டுரைகளை அனுப்பும் போது பிற பத்திரிகைகட்கு அனுப்பப்பட்டதெனக் குறிப்பிட்டனுப்பினால் தேவையற்ற சிரமங்களையும், குழப்பங்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

நன்றி - நூலகத்திட்டம்





# வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம்

முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்பு தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படாத சில முக்கியமான விடயங்களைக் கட்டுரையாளர் மருதூர் பஷீத் சுட்டிக் காட்டுகிருர். கடந்த இதழில் முஸ்லிம்களின் குடிசனப்பரம்பல், சுயமான அரசியல் இயக்கத்திற்கான சூழல் சமூக பொருளாதார நிலைமைகளில் வட- கிழக்கு முஸ்லிம்களுக்கும் தெற்கு முஸ்லிம்களுக்குமான பிரதான வேறுபாடுகள் பற்றி விளக்கப்பட்டன. அதன் மீதி இவ்விதழில்.

1880 களில் தமிழர் தலைமையிடமிருந்து, முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான விவாதத்தின் போது, "இலங்கைச் சோனகர்" என்ற வரையறைக்குள் வடக்கு - கிழக்கு முஸ்லிம்களை இணைக்காமல் விலக்கியதிலிருந்து, இந்த மரபுவழி தெற்கு முஸ்லிம் தலைமையின் அரசியல் துரோகங்கள் ஆரம்பிக்கின்றன. சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பேணும் நோக்கில் தமிழர் தலைமைகளால் முன்வைக்கப்பட்ட ஐம்பதுக்கு ஐம்பது மற்றும் சமஷ்டி ஆட்சி என்பவற்றுக்கான கோரிக்கைகளை எதிர்த்தமை, முழு இலங்கையிலும் முஸ்லிம்களின் தாய்மொழியாக தமிழ்மொழியே விளங்கிய போதிலும் தனிச்சிங்களச் சட்டத்தை ஆதரித்தமை, தமது கல்வி மொழியாக சிங்கள மொழியை ஏற்கும்படி தெற்கு முஸ்லிம் மாணவர்களைத் தூண்டியமை; முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ் அல்ல என்ற பிரச்சாரத்தைத் தோற்றுவித்தமை. என மரபுவழித் தெற்கு முஸ்லிம் தலைமையின் அரசியல் துரோகங்கள் தொடர்கின்றன. இவற்றோடு, சிங்கள மொழியின் நிர்வாக ஆதிக்கம், முஸ்லிம்களின் பொருளாதார முயற்சிகள் சிங்கள அரசினால் திட்டமிட்டுத் தடுக்கப் படுதல், சிங்கள இனவாதிகளினால் திட்டமிட்ட ரீதியில் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற தெற்கு முஸ்லிம்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களின் போது அவர்களுக்கு ஏற்படும் உயிர், உடமை அழிவுகள், முஸ்லிம்களின் பாரம்பரியக் காணிகள் பறிக்கப்படுதல், அரசின் அபிவிருத்தி முயற்சிகளில் இருந்து முஸ்லிம் பிரதேசங்கள் ஒதுக்கப்படுதல், முஸ்லிம்களின் அரசியல் உரிமைகள் பறிக்கப்படுதல், நிர்வாகத் துறைகளில் வழங்கப்படும் வேலை வாய்ப்புகளில் முஸ்லிம்களுக்குரிய விகிதாசார ஒதுக்கீடுகள் மறுக்கப்படுதல் .... போன்ற அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் இந்த மரபு வழி தெற்கு முஸ்லிம் தலைமை, தனது சொந்த நலன்களைப் பேணிக் கொள்வதற்காக முழு முஸ்லிம்களின் நலன்களுக்கும் விரோதமாகவே செயற்பட்டு வந்திருக்கிறது. தமது இத்தகைய சமூகத் துரோகங்களின் விளைவாக, இன்று தெற்கு முஸ்லிம்கள் சமூக, பொருளாதார, அரசியல் என சகல துறைகளிலும் தமக்குரிய உரிமைகளையும் வாய்ப்புகளையும் இழந்து விட்டு நிற்கும் நிலையிலும் கூட, வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தீர்வு விடயத்தில் இந்தத் தலைமை, அந்த முஸ்லிம்களின் நலன்களைப் பற்றி எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. மாறாக, சிங்கள இனவாதக் கட்சிகளைத் திருப்திப்படுத்தி, அதன் மூலம் தமது அரசியல் வாழ்வைத் தொடர்ந்தும் பேணிக் கொள்வதையே இலக்காகக் கொண்டிருக்கின்றது. கிழக்கு மாகாண விடுதலை முன்னணியின் உருவாக்கம், முஸ்லிம் தகவல் பரிமாற்ற நிலையத்தின் (MIC) நிலைப்பாடு என்பவை இவற்றின் பிரதிபலிப்பே. வடக்கு - கிழக்கு இணைப்பைத் துண்டிக்க முனையும் சிங்கள இனவாத சக்திகளைத் திருப்திப்படுத்தியிருப்பதைத் தவிர, இவற்றின் மூலம் வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் இன்று முகம் கொடுத்திருக்கும், பிரச்சினைகளுக்கான எந்தத் தீர்வையும் இந்தத் தலைமை முன்வைக்கவில்லை.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள் மீது, இந்தத் தெற்கு தலைமைக்கு நேர்மையான அக்கறையிந்தால், வடக்கு - கிழக்கின் இன்றைய போர்காலச் சூழலில் இவர்கள் செய்ய வேண்டியது, யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்காகத் தீவிரமாக செயற்படுவதுதான். யுத்தத்தினால் அழிவுக்கும், இழப்புக்கும் ஆளாகி, இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கும் ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் தமது இருப்பிடம் திரும்பவும், அனைத்து வடக்கு - கிழக்கு முஸ்லிம்களும் எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல் தமது அரசியல் எதிர்காலம் பற்றிய முடிவுகளை வெளிப்படுத்தவுமான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் இன்று செய்ய வேண்டியுள்ள முதன்மையான பணி. இதை விட்டு விட்டு, கிழக்கு மாகாணத்தை பிரிக்கக் கோருவது, பௌத்த-சிங்கள பேரினவாதத்தைத் திருப்திப்படுத்துவதற்காக, தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகம் மட்டுமல்ல, வடக்கு-கிழக்கு முஸ்லிம்களுக்கும் செய்யும் துரோகம் தான்.

இந்த மரபு வழி தெற்கு முஸ்லிம் தலைமை, வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகள், நலன்கள் விடயத்தில் ஒருபோதும் நேர்மையான அக்கறை கொள்ளவில்லை. இந்நிலையில் இந்தத் தலைமை, வடக்கு-கிழக்கு முஸ்லிம்களை ஒருபோதும் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. மறுபுறத்தில் இந்தத் தலைமை தெற்கு முஸ்லிம்களையும் உண்மையாகப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இவ்வாறு எந்த முஸ்லிம்களுக்குமே தலைமை தாங்கும் தகுதியும், உரிமையும் அற்ற நிலையிலேயே மரபு வழி தெற்கு முஸ்லிம் தலைமை இன்று இருக்கின்றது. ஒரு நூற்றாண்டு கால தலைமைப் பொறுப்பினூடாக இலங்கை முஸ்லிம்களை அழிவின் 'விளிம்பிற்கு இட்டுச் சென்றிருக்கும் இந்த மரபு வழி தெற்கு முஸ்லிம் தலைமையின் அனைத்துவகை மேலாண்மையிலிருந்தும் முஸ்லிம் சமூகம் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் தான் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் உரிமைகள் தெற்கிலும் வடக்கு-கிழக்கிலும் நிலைநாட்டப்படும் சூழ்நிலை உருவாகும்.

தெற்கு முஸ்லிம்களிட மிருந்து சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் வேறுபட்டு நிற்கும் வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் 1980 கள் வரை தமக்கென சுயமான அரசியல் இயக்கத்தை உருவாக்கிக் கொள்ள முடியாதவர்களாகவே இருந்தனர். இந்நிலை ஏற்பட்டதற்கு, இலங்கையின் ஜனநாயக அரசியலானது உயர்கல்வித் தகைமையும், அந்தஸ்த்தும், செல்வாக்கும் பெற்ற பிரிவினரிடையிலேயே தங்கி விட்டமையும், கிழக்கு முஸ்லிம்களிடையே நீண்டகாலமாக நிலவிய அரசியல் உறக்க நிலையும், மற்றும் கிழக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் சுயநலமும், சமூகப் பொறுபபின்மையுமே முக்கிய காரணிகளாக அமைகின்றன. எனினும் குறிப்பாக 1960 களின் பின்னர் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களிடையே பரந்த அளவில் ஏற்பட்ட கல்வி மீதான ஆர்வத்தின் விளைவாக, அங்கு படித்த பிரிவினர் உருவாகத் தொடங்கினர். இந்த படித்த, மத்திய தரப் பிரிவினர் தான், வடக்கு-கிழக்கு முஸ்லிம்களிடையே நிலவிய அரசியல் மந்தநிலையை அகற்றக்கூடியவர்களாகச் செயற்பட்டனர். ஒரு தசாப்தத்திற்கும் மேலான அவர்களின் கடினமான போராட்டத்தின் பின்னர் 1980 களில் தமக்கென தனித்துவ மான, சுயமான அரசியல் அமைப்புக்களை உருவாக்கிக் கொள்ள அவர்களால் முடிந்திருக்கிறது. இத்தகைய அரசியல் அமைப்புக்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் குறிப்பிடக்கூடியவை. இவற்றில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தன்னை ஒரு வெகுஜன அரசியல் கட்சியாக உருவாக்கிக் கொண்டுள்ளது.

வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பவர்கள் 1980 களின் மத்திய பகுதியின் பின்னுல், குறிப்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சூழ்ந்து உருப்பெற்ற வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் எழுச்சியைக் கவனமாகவும், முறையாகவும் மதிப்பிடுவது அவசியமானது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றம், வெறுமனே ஒரு அரசியல் கட்சியின் தோற்ற மல்ல. மாறாக, அது வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் விழிப்புணர்வின் வெளிப்பாடு. உண்மையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது, வடக்கு-கிழக்கு முஸ்லிம்களிடையே உருப்பெறத் தொடங்கிய தேசிய உணர்வின் விளைபொருள்.

எனவே 1980 களில் உருப்பெறத் தொடங்கிய வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் தேசிய எழுச்சியை இனங்கண்டு கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இந்தத் தேசிய எழுச்சி இனிமேல் தடுக்கப்பட முடியாது. வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இயக்கம் தனக்குரிய இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லும். இந்தத் தேசிய இயக்கத்தை எதிர்ப்பதோ, அல்லது நிராகரிப்பதோ, இன்று வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் எதிர் கொண்டிருக்கும் நெருக்கடிகளுக்கு எவ்வித நன்மையையும் வழங்கப் போவதில்லை. மாறாக, இத்தகைய நிராகரிப்பு, வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் அடிமைத்தனத்தை அங்கீகரிப்பதற்கே வழிவகுக்கும்.

தமிழ், சிங்கள இனவாத அடக்குமுறைகளின் நெருக்குதல்களுக்குள்ளாகியிருக்கும் வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் இந்த இருவகை இனவாதங்களுடன் சமரசம் செய்து கொள்வதன் மூலமோ, அல்லது அவற்றுக்குப் பணிந்து போவதன் மூலமோ தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. இத்தகைய சமரசமும் பணிவும் மேலும் மேலும் தமது உரிமைகளை இழக்கவும் அடிமைப்படவுமே வழிவகுக்கும். மாறாக இந்த இனவாத அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடி, தாமே முற்றிலும் தீர்மானிக்கக்கூடிய, தமக்கென சொந்தமான அரசியல் அதிகாரத்தை வென்று கொள்வதன் மூலம் தான் வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் தமது உரிமைகளை நிலை நாட்டிக் கொள்ளவும், தமது தனித்துவத்தைப் பேணிக் கொள்ளவும் முடியும். இத்தகைய இலக்கை நோக்கி அவர்களை வழிகாட்டிச் செல்வதற்குரிய ஆற்றலையும், சமூக நேர்மையையும், வெகுஜனக் கட்சியாக உருவாகியுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொண்டிருக்கின்றதா என்பது விவாதத்துக்குரிய விடயமே. ஏனெனில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையின் முன்னுக்குப் பின் முரணான முடிவுகளும், அரசியல் ஊசலாட்டங்களும், முழு இலங்கை முஸ்லிம்களின் அரசியல் கட்சியாக, தேசியத் தலைமையாகத் தன்னை உருவாக்கிக் கொள்ள எடுக்கும் அர்த்தமற்ற முயற்சிகளும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இயக்கத்தைத் தொடர்ச்சியாக வழிநடாத்திச் செல்வதற்கு எவ்விதத்திலும் உதவ மாட்டாது. பதிலாக, தமது தனித்துவத்தையும், உரிமைகளையும் நிலைநாட்டுவதற்கான வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் போராட்டத்தை தவறான வழியில் இட்டுச் செல்லவோ, அல்லது இடையில் கைவிட்டு விடவோ தான் வழிவகுக்கும். மறுபுறத்தில், வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் தனித்துவத்திலும், அரசியல் உரிமைகளிலும் உறுதியான நிலைபப்பாடுகளைக் கொண்டிருக்கின்ற முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயல் முனைப்பற்ற தன்மை, வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இயக்கத்திற்கு குறிப்பிடக்கூடிய இழப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை அந்த அமைப்பினர் உணர்ந்துகொள்வது அவசியம்.

எனினும் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களிடையே உருவாகும் அரசியல் அமைப்புக்களின் தவறான போக்குகளோ, அல்லது அவற்றின் மீதான விமர்சனங்களோ வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இயக்கத்தை நிராகரிக்க வழிவகுக்கக் கூடாது. தமது தேசிய இயக்கம் பிரவாகித்துச் செல்லக் கூடிய அரசியல் வடிகாலாக அமையும் வரையில்தான். இத்தகைய அமைப்புக்கள் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இத்தகைய அரசியல் பாத்திரத்திலிருந்து விலகும் அந்தக் கணத்திலிருந்து, வடக்கு-கிழக்கு முஸ்லிம்களால் அவை தூக்கியெறியப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் எவ்வாறாயினும், இத்தகைய அமைப்புக்கள் மீதான தீர்ப்பை வழங்கும் உரிமை வடக்கு- கிழக்கு முஸ்லிம் களுக்கு மட்டுமே உரியது. அந்தத் தீரப்பை அவர்கள் உரிய நேரத்தில் உரிய முறையில் வழங்குவார்கள்.

சிங்கள, தமிழ் இனவாத ஒடுக்குமுறைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முயலும் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் சுயநிர்ணய உரிமையில் தலையிடுவதற்கு, தெற்கு முஸ்லிம்களுக்கோ, அதன் தலைமைகளுக்கோ எவ்வித உரிமையும் கிடையாது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை முஸ்லிம்கள் வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழ்கிறார்கள் என்பதைக் காரணமாகக் காட்டி, வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை நிராகரிக்க முடியாது. ஏனெனில் ஒரு இனம் தனது அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டத்தில் அதன் எண்ணிக்கையை ஒரு தடையாகக் கொள்ள முடியாது. பெரும்பான்மை முஸ்லிம்கள் இந்தியாவில் இருக்க, சிறுபான்மை பாகிஸ்தான் முஸ்லிம்கள் தான் தமது அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொண்டார்கள். இப்போதும் கூட அதே பெரும்பான்மை முஸ்லிம்கள் இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் இருக்க சிறுபான்மை காஷ்மீர் முஸ்லிம்கள் தான் தமது அரசியல் சுயநிர்ணயத்திற்காகப் போராடுகிறார்கள்.

இலங்கையில் தெற்கு முஸ்லிம்கள் அரசியல் உரிமைகளுக்கு எதிராகவோ, அல்லது அவர்களின் முற்போக்கு இயக்கத்திற்கு எதிராகவோ வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இயக்கம் அமையவில்லை. மாறாக அரசியல் ரீதியில் பலவீனப்பட்டும், வேறுபட்டும் இருக்கும் தெற்கு முஸ்லிம் களின் கைகளில், அவர்களின் சுயநலத் தலைமைகளின் கைகளில் தமது அரசியல் எதிர்காலத்தை இனியும் ஒப்படைக்க முடியாது என்ற யதார்த்த நிலைமையின் விளைவாகத்தான் வடக்கு- கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இயக்கம் உருப்பெற்றிருக்கிறது.

**மருதூர் பஷீத்**

வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இயக்கத்தின் காரணமாக தெற்கில் வாழும் முஸ்லிம்களுக்கு, சிங்கள இனவாத சக்திகளினால் ஆபத்து ஏற்படும் என்ற அச்சமும், விவாதமும் அர்த்தமற்றது. இவ்விதம் தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் எனத் தெற்கு முஸ்லிம்கள் கருதினால், இங்கு தீவிரமான பரிசீலனைக்கும், மாற்றத்திற்கும் உள்ளாக வேண்டியது வடக்கு-கிழக்கு

→ பார்க்க பக்கம் 11

நன்றி - நூலகத்திட்டம்



சில வாரங்களுக்கு முன்பு புஸல்லாவைப் பிரதேசத்திலுள்ள றொத்ஸ்ச்சைல்ட் தோட்டத்தின் 15 ஏக்கர் காணியை அப்பிரதேசத்தில் வாழும் பெரும்பான்மையினத்தவருக்கு மகாவலி அபிவிருத்திச் சபையினால் பிரித்துக் கொடுத்து குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு, அந்நடவடிக்கையை எதிர்த்து மேற்கூறிய தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ததனால் அத்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

சிங்கள மக்களுக்கு காணி வழங்குவதற்கு தமிழ் தோட்டத் தொழிலாளர்களும், தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள் என்னும் பாணியில் இச்சம்பவம் பற்றிய முன்பக்கத் தலைப்புச் செய்தியை வெளியிட்டு மலையகத் தமிழர்களுக்கெதிராக சிங்கள மக்களின் உணர்வுகளைத் தூண்டி பேரினவாதத்தை வாழ்விக்கும் தனது தேசிய திருப்பணியை நிறைவேற்றி வைப்பதில் திவயின என்ற சிங்கள நாளிதழ் முயற்சிகள் மேற்கொண்டது.

இத்தற்காலிக காணிப்பகிர்வுத் தடை தொடர்பாக மேலும் ஆங்காங்கே கண்டனக் குரல்களும், எதிர்ப்புகளும் தெரிவிக்கப்பட்டதோடு "மலைநாட்டில் ஒரு சிங்களவர் இறந்தால் கூட அடக்கம் செய்ய தமிழர்கள் அனுமதி கோரவேண்டும்" போன்ற உண்மைக்கு மாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டமையும் காணக் கூடியதாக இருந்தது.

## றொத்ஸ்ச்சைல்ட் தோட்டத்தின் இன்றைய நிலை

- றொக்ஸ்ச்சைல்ட் தோட்டம் 1800 க்கு மேற்பட்ட ஏக்கர்களைக் கொண்ட ஒரு தோட்டமாகும். இவற்றில் மூன்றிற்கு இரண்டு பங்கு காணி கொத்மலை நீர்த்தேக்கத்தினால் நிலமிலந்த சிங்களக் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு அவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.
- மிகுதியுள்ள சுமார் 500 ஏக்கர் நிலத்தில் தான் இத்தோட்டம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இத்தோட்டத்தின் பெரும்பகுதி நிலம் பகிர்ந் தளிக்கப்பட்டதனால் இத்தோட்டத்தில் வயது வந்தவர்களுக்கு தொழில் வழங்குவது மறுக்கப்பட்டு வந்துள்ளது. எனவே வயது வந்த ஆண்களும் பெண்களும் வேலையற்றவர்களாக வாழவேண்டிய நிலைமையில் இருக்கின்றனர். தோட்டங்களில் வயதுவந்த பெண்களைத் திரமணம் செய்ய தொழிற்பதிவை ஆண்கள் எதிர்பார்ப்பதால் தமது பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுக்க முடியாத நிலையில் பல பெற்றோர்கள் திண்டாடுகின்றார்கள்.
- 1983ம் ஆண்டளவில் சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா செல்லவெனக் கடவுச் சீட்டு பெற்றவர்கள் வேலையிலிருந்து நீக்கப் பட்டார்கள். எனினும், போக்குவரத்து வசதி (கப்பல்) இன்மையின் காரணமாக இவர்கள் இந்தியா செல்வது தாமதிக்கப்பட்டது. இது போன்ற நிலைமைகளுக்கு ஆளாகிய ஏனைய தோட்டத் தொழிலாளர்களுக்கு அவ்வத்தோட்டங்களில் தற்காலிகமாகவேனும் தொழில் செய்யும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இத்தோட்டத்தில் தொழில் வழங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாமையின் காரணமாக கடவுச்சீட்டுப் பெற்ற சுமார் 60 குடும்பங்கள் நிரந்தர தொழிலின்றி பல ஆண்டுகள் வாழ்ந்து வருகின்றனர். அப்பிரதேச கிராமங்களில் கிடைக்கும் அன்றாட கூலி வேலைகளை செய்வது இல்லையேல் அவ்வழியாக செல்லும் உல்லாசப் பயணிகளிடம் கையேந்திப் பிச்சையெடுத்து வாழ்க்கையை நடத்துவதைவிட வேறு வழியில்லாமல் இருக்கின்றார்கள்.
- இத்தோட்டத்தில கணிசமான சிங்களத் தொழிலாளர்கள் தொழில் செய்கின்றனர். இத்தோட்ட முழுத்தொழிலாளர் எண்ணிக்கையில் சுமார் 40%த்தினர் சிங்களத் தொழிலாளர்களாவர். இவர்களில் சிலருக்கு முன்னைய அரசினால் வழங்கப்பட்ட காணிகள் 1977 ம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசாங்கம் பறித்து விட்டதாகவும் கூறப்பட்டது. இவ்வேலை நிறுத்தத்தில் எவ்விதப் பாகுபாடுமில்லாமல் இரு சாராரும் பங்கு பற்றினர்ர்கள்.
- இத்தோட்டக்காணி 15 ஏக்கரை குடியேற்றத் திற்காக அரசு பயன்படுத்தினால் இத்தோட்ட்த்தில் வாழும் ஒவ்வொரு தொழிலாளியும் வருடத்திற்கு 17 நாட்கள் வேலை இழக்க நேரிடும் என இத்தோட்ட நிர்வாகம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. இந்நடைமுறை சாதகமாகு மாயின் ஒவ்வொரு தொழிலாளியும் வருடத்திற்கு 17 நாட்களுக்கான சம்பளத்தை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

## தொழிற்சங்கங்களின் அக்கறையின்மை :-

இக்காணிப் பகிர்வு பற்றி அமைச்சரவை தீர்மானித்து பின்பு அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டே காணிப்பகிர்விற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், இத்தோட்டத் தொழிலாளர்கள் அங்கம் வகிக்கும் மூன்று தொழிற்சங்கங்களில் இரண்டான லங்கா ஜாதிக தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்களான ரணில் விக்ரமசிங்கவும், சௌமிய மூர்த்தி தொண்டமானும் அமைச்சரவையில் அங்கம் வகித்தாலும், இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்க முயலவில்லை, என்பது மிக முக்கியமான விடயம். இத்தோட்டத் தொழிலாளர்கள் அங்கம் வகிக்கும் மற்றொரு தொழிற்சங்கமான ஐக்கியத் தோட்டத் தொழிலாளர் சங்கமும் எதுவிதமான நடவடிக்கை களையும் முன்கூட்டியே எடுக்கத் தவறியுள்ளது.

தோட்டத் காணியைப் பகிர்ந்தளிக்க மகாவலி அதிகார சபையின் அதிகாரிகள் வருகை தந்தவுடன் தான் தொழிலாளர்களுக்கு விடயம் தெரிய வந்தது. தொழிலாளர்கள் தமது தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிர்ப்பு தெரிவித்ததன் பின்தான் "தொழிற்சங்க தலைமைகள்" இவ்விடயத்தில் தலையிட்டு தனது தொழிலாளர் பாதுகாப்பாளர் வேடத்தைப் பூண்டுக் கொண்டு அங்கத்தினர் சந்தாவையும், ஆதரவையும் பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கின.

"இத்தலைமைகள் உண்மையாகவே சமூகப் பற்றுடையவையாக இருந்திருந்தால் சம்பவங்களை மூடி மறைக்காமல், முன்கூட்டியே நடவடிக்கை எடுத்து இந்நிலைமையைத் தவிர்த்திருக்கலாம். நாங்கள் 21 நாட்கள் வேலைநிறுத்தம் செய்து எங்கள் வருமானத்தை இல்லாமலாக்கி இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டிருக்காது." என பல தொழிலாளர்கள் தமது தொழிற்சங்க தலைமைகள் மீது அதிருப்தி தெரிவித்தனர்.

எனினும், வேலை நிறுத்தம் செய்தும் இப்பிரச்சிணை முடிந்ததாகத் தெரியவில்லை. காணி கிடைக்கப்பெற்ற பல பெரும்பான்மையின குடும்பங்கள் தங்களது வீடுக்ளைக் கட்ட ஆரம்பித்திருப்பதையும், யார் எதிர்த்தாலும் சிங்கள மக்களுக்கு காணியைக் கொடுத்தே தீருவேன்" என அரச மகாவலி அதிகார சபை அதிகாரி கூறியதாக வெளிவந்த பத்திரிகைச் செய்தியும் பிரச்சினையின் தீவிரத்தைக் குறைத்ததாக இல்லை.

## காணிப் பகிர்வில் இனவாதம் :

பெருந்தோட்டத் தொழிற்துறை உட் கொண்டுள்ள காணிகள் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிப்பு என்பது இன்று, நேற்று ஏற்பட்டுள்ள பிரச்சினையல்ல. இது பல தசாப்தங்களாக நிலவி வருவதொன்றாவதோடு, இப்பிரச்சினையானது மலையகத் தோட்டத் தொழிலாளர்களினதும், மலைநாட்டு சிங்கள கிராமவாசிகளினதும் சமூக, பொருளாதாரப் பிரச்சினையோடு நேரடியாக தொடர்புபட்டதொன்றாகும்.

மலைநாட்டுப் பிரதேசத்தில் பெருந்தோட்டத் தொழிற்துறை ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் மலைநாட்டுக்கிராமங்கள் மிகவும் சிறியனவாகவும் பொருளாதார தன்னிறைவு கொண்டவையாகவும் இருந்தன. இக்கிராமவாசிகளினால் பாவனைக்குட்படுத்தப்பட்ட நிலம் தவிர்ந்த ஏனைய காணிகள் அப்போதைய அரசினால் சுவீகரிக்கப் பட்டு பெருந்தோட்டத் தொழிற்துறைக்கு உட்படுத்தப்பட்டன. நாளடைவில் இக்கிராம வாசிகளின் குடிசன அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்ட பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இக்கிராமக் காணிகள் போதுமானதாக இருக்கவில்லை. மேலும், அரசினால் நடைமுறைப் படுத்தப்படும் பொருளாதாரக் கொள்கைகள் இக்கிராம மக்களின், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மாற்றுத் தீர்வுகளை அளிக்கக் கூடியவனவாகவும் அமையவில்லை. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட இக்கிராம மக்களின் பொருளாதாரப் பிரச்சினைக்கு மாற்றுப் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன் வைக்காத நிலையில் இவர்களின் கிராம விஸ்தரிப்பு என்பது ஒரு தவிர்க்க முடியாத விடயமாக அமைகின்றது. கிராம விஸ்தரிப்பு நடைபெற வேண்டுமேயானால் அது பெருந்தோட்டத் தொழிற்துறைக்கு உட்கொள்ளப்பட்டுள்ள காணிகள் கிராமிய விஸ்தரிப்பிற்காக விட்டுக்கொடுக்கப்பட வேண்டிய நிலைமையை உருவாக்குகின்றது. இதிலுள்ள சிக்கலான விடயம் என்னவென்றால், தமிழ் தோட்டத் தொழிலாளர் களுக்கு அநீதிகளை இழைக்காமல் இத்திட்டத்தை எப்படி மேற்கொள்வது என்பதும், இத்திட்டங்களை நிறைவேற்றும்போது கிராமிய சிங்கள மக்களினதும், தமிழ் தோட்டத் தொழிலாளரினதும் சமூகப், பொருளாதார அபிலாஷைகளைப் புறக்கணிக்காது அவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் நடை முறைத் திட்டங்களை வகுத்து செயற்படாமையு மேயாகும்.

## தேசிய மயமாக்கலும் இனவாதமும் :

1972ம், 1974ம் ஆண்டின் நிலச்சீர்தித்தச்சட்ட அமுலாக்கலுடன் பெருந்தோட்டத் தொழிற்துறை அரசுடைமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து இக்காணிப் பங்கீடு என்ற விடயம் ஒரு முக்கிய பிரச்சினையாக மலைநாட்டில் உருவெடுத்தது. மலையகத் தமிழ் தொழிலாளர்களுக்கும், சிங்கள மக்களுக்குமிடையிலான உறவுகளை நிர்ண யிக்கும் ஒரு காரணியாகவும் இது காணப்படுகின்றது.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் பெருந் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட சம்பவம் ஒரு முற்போக்கு நடைமுறையாகக் கருதப்பட்டு பல்வேறு சக்திகளினாலும் வரவேற்கப்பட்ட விடயமாகும். ஆயினும் இலங்கையின் பேரினவாத அரசியலானது இந்நடைமுறைகளை இனவாத ரீதியில் செயற்படுத்த விழைந்ததன் காரணமாக இனவாத முரண்பாட்டைத் தோற்றுவித்தது.

மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், ஐக்கிய தேசியக் கட்சியும் இச்சம்பவங்களை மிகவும் சிறப்பாகப் பயன்படுத்தி தமிழர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டன. மாற்றுத் தொழிற்சங்க அங்கத்தினரான சிவனு இலட்சுமணனின் பிரேதத்தைப் பலாத்காரமாகக் கைப்பற்றிய இ.தொ. காங்கிரசினர் அவரின் பிரேத ஊர்வலத்தை ஒரு மாபெரும் அரசியல் ஊர்வலமாக மாற்றியதோடு டெல்டா, சங்குவாரித்தோட்ட சம்பவங்களையும் முன்வைத்து முதலைக் கண்ணீர் வடித்து 1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலின்போது வாக்கு வேட்டையாடினர். இதில் ஐ.தே.கட்சியும் போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்டது. தேர்தல் முடிந்தது. வெற்றி கிடைத்தது. மலையக மக்களின் போராட்டத்தில் உயிர்நீத்த சிவனு இலட்சுமணன் கேட்பாரற்ற அநாதையாக்கப்பட்டார். டெல்டா, சங்குவாரித் தோட்ட சம்பவங்கள் அவ்வப்போது வந்துபோகின்ற தேர்தல்களுக்கு வாக்கு வேட்டையாடும் ஆயுதமாக மட்டும் பயன்படுத்தப் படுகின்றது. ஆனால், மலையகத்தில் மேற் கொள்ளப்படும் இனவாத ரீதியான காணிப் பகிர்வு தொடர்ந்து கொண்டு செல்கின்றது. அதை எதிர்த்து அவ்வப்போது போராடுவதும் மலையகத் தொழிலாளர்களின் தலைவிதியாக மாறிவிட்டது.

# மலையக காணிப்பகிர்வும் இனவா

1970–1977 காலகட்டத்தில் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த ஸ்ரீ.ல.சு. கட்சியினதும், இடது சாரிகளினதும் கூட்டரசாங்கமானது மலைநாட்டுக் காணிகள் சிங்கள மக்களுக்கு உரித்தானவை. எனவே இக்காணிகளை அவர்களுக்கு மீண்டும் வழங்குவது தான் தோட்டங்கள் தேசியமயமாக்கலின் பிரதான நோக்கம் என வெளிப்படையாகக் கூறிக்கொண்டு செயற்பட ஆரம்பித்ததன் விளைவாக பல தோட்டங்களில் தமிழ் தொழிலாளர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, அத்தோட்டக்காணிகள் சிங்கள மக்களுக்கு அதுவும் தமது கட்சியின் ஆதரவாளர்களுக்கு எவ்வித முறையான ஆவணங்களோ அல்லது திட்டங்களோ அற்ற நிலையில் பகிர்ந்தளிக்கப்பட்டன. இக்காணிகளில் தொழில் செய்த தமிழ் தொழிலாளர்கள் தெருக்களில் வாழ்க்கை நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஒருசில தோட்டங்களில் வாழ்ந்த தமிழ் தொழிலாளர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டார்கள்.



## சிவனு லட்சுமணன் கொலை :

சில தோட்டங்களை பெரும்பான்மை யினருக்குப் பிரித்துக் கொடுப்பதற்காக தோட்டங்களிலிருந்து வெளியேற தமிழ் தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட்ட போது அதை எதிர்த்த பல தோட்டங்களின் தொழிலாளர்கள் அரசினதும், அரசக்கட்சி ஆதரவாளர்களினதும் வன்முறைத்தாக்குதல்களுக்கு ஆளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவர்களின் உடமைகள் சூறையாடப்பட்டன. 1977ம் ஆண்டு நுவரெலிய மாவட்டத்தின் டெவன் தோட்டத்தைப்பகிர்ந்தளிக்க மேற்கொண்ட முயற்சிகளை எத்ர்த்த தொழிலாளர்களுக்கு எதிராக பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததனால் டெவன் தோட்டத் தொழிலாளி சிவனு லட்சுமணன் கொல்லப்பட்டதும், புஸல்லாவைப் பிரதேசத்தைச் சேர்ந்த சங்குவாரித் தோட்டத் தொழிலாளர்கள் வன்முறைத் தாக்குதல்களுக்கு ஆளாகியமையும், டெல்டா தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் தீவைத்து எரிக்கப்பட்டு அவர்களின் உடமைகள் சூறையாடப்பட்டமையும் குறிப்பிடத் தக்க சம்பவங்களில் சிலவாகும்.

## கொலையும் வாக்குவேட்டையும்

1977ம் ஆண்டின் பொதுத்தேர்தல் பிரச்சாரத்தின் போது மலையகப்பிரதேசத்தில் தமிழ்



## காணிப் பகிர்வும் மலையக மக்களின் எதிர்ப்பும்:

மலையகப் பிரதேசங்களில் பெருந்தோட்டத் தொழிற்துறைக்கு உட்பட்டுள்ள காணிகள் அரசினால் பங்கீடு செய்யும் நடவடிக்கை தொடர்பாக மலையக மக்கள் மத்தியில் நிலவும் எதிர்ப்புணர்விற்குப் பின்வருவன காரணிகளாக அமைந்துள்ளமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

1977, 1981, 1983 என காலம் காலமாக தொடர்ந்து வரும் பேரினவாத வன்முறைத் தாக்குதல்களில் பெரிதும் பலியானவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பான்மை மக்களுக்கு மத்தியில் சிறுபான்மையினராக வாழும் தமிழர்களே. மலையகத்தமிழர்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் அவர்களுக்கான தற்பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது. எனவே அரசு திட்டமிட்ட அடிப்படையில் மலையக மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் அவர்களின் இன விகிதாசாரத்தை மாற்றும் நோக்கில் மேற்கொள்ளும் குடியேற்றத் திட்டங்களினால் அவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட வாய்ப்புகளுண்டு. எனவே இவ்வாறான திட்டங்களை எதிர்க்கின்றார்கள். இவ்வகையான காணிப்பகிர்வின் மூலம் தோட்டப் பயிர் செய்கைநிலம் குறைந்து கொண்டு செல்கின்றது. இதனால் தொழிலாளர்களின் வேலை நாட்கள் பாதிக்கப்பட்டு அவர்களின் வருமானம் பாதிப்படைய இடமுண்டு. (றொத்ஸ்ச் சைல்ட் சம்பவம் ஒரு நல்ல உதாரணம்) எனவே, முறையான மாற்றுப் பொருளாதார நடைமுறைகள்

நன்றி - நூலகத்திட்டம்



மேற்கொள்ளப்படாமல் நடைமுறைப்படுத்தப்படும் காணிப் பங்கீட்டை எதிர்க்கின்றார்கள்.

மலையக மக்களும் இந்நாட்டின் பல்லின சமூகத்தின் ஒரு இனம். எனவே இந்நாட்டு அரசாங்கம் மேற்கொள்ளும் காணிப்பகிர்வு திட்டங்களின் மூலம் காணிகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை இவர்களுக்கும் உண்டு. இவர்கள் தமிழர் என்பதற்காக இவர்களை முற்றும் முழுதுமாகப் புறக்கணித்து விட்டு மேற் கொள்ளப்படும் காணிப்பகிர்வை எதிர்க்கின்றார்.

பெருந்தோட்டக் காணிப்பகிர்வு தொடர்பான தமிழ் தொழிலாளர்களின் நியாயமான எதிர்ப்புகளை நிராகரித்து விட்டு பலாத்கார வழி முறைகளில் காணிப்பகிர்விற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுமாயின் அவை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துவதை தவிர்க்க முடியாது போய்விடும்.

1978ம் ஆண்டு ஐ.தே.க. அரசாங்கம் தோட்ட - கிராமிய ஒருங்கிணைப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக அரச உயர் அதிகாரிகளைக்

ழும்




காண்ட ஒரு உயர் மட்ட செயற் குழுவை மித்தது. (Steering Committee on Estate llage Inter gration) அச்செயற்குழு இவ்விடயம் தாடர்பாக பொது மக்களிடமிருந்து ஆலோசனை ளையும், சிபாரிசுகளையும் கோரியபோது பல்வேறு றுவனங்கள் தமது சிபாரிசுகளையும், லோசனைகளையும் முன் வைத்தன. எனினும் ச்செயற்குழு எவ்வித ஆக்கபூர்வமான ணிகளையும் செய்ததாகத் தெரியவில்லை.

ஆனால் இனவாத ரீதியாக காணிப்பகிர்வு ரும், அதை எதிர்க்கும் தொழிலாளர்களின்

போராட்டங்களும் நடைபெறுவது ஒரு அன்றாட விடயமாகி விட்டது.

"தோட்ட தரிசு நிலப்பகிர்வில் தோட்டத்தில் உள்ளோருக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும். அரசிடம் இதனை வலியுறுத்தியுள்ளேன்"
- தொண்டமான். (22/6/90 வீரகேசரி)

தோட்டப்பகுதியில் உள்ள நிலத்தைச் சுவீகரித்துப்பகிர்ந்தளிக்கும் போது தனிப்பட்ட அரச அதிகாரிகளோ அல்லது தோட்ட நிர்வாகியோ எந்தவொரு தீர்மானத்தையும், முடிவையும் மேற்கொண்டு காணியை சுவீகரிக்க, பகிர்ந்தளிக்க முடியாது. தோட்டத்தில் உள்ள தமது தோட்டக் குழுத் தலைவரும், அதற்காக நியமிக்கப்பட்ட குழுவும் தான் காணியை சுவீகரிப்பதா ? பகிர்ந்தளிப்பதா ? யார் யாருக்கு பகிர்ந்தளிப்பது என்று முடிவு செய்ய வேண்டும்." -அமைச்சர் தொண்டமான் (3/11/90 வீரகேசரி)

"மலையகத்தில் இனிமேல் காணிச் சுவீகரிப்பு திட்டமிட்ட குடியேற்றங்கள் இல்லை. அரசு தீர்க்கமான கொள்கைக்கு வந்துள்ளதாக பிரதமர் விஜேதுங்க அமைச்சர் தொண்டமானிடம் உறுதியளித்துள்ளார்." (15/12/90 வீரகேசரி)

இச்செய்திகளின் அடிப்படையில் பார்க்கும் போது மலையகத்தில் காணி சுவீகரிப்பு, காணிப்பங்கீடு தொடர்பாக 1990ம் ஆண்டே உறுதியான கொள்கைகளும் நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் அன்றுமுதல் 1992ம் ஆண்டு யூலை மாதம் நிகழ்ந்த றொத்ஸ்சைல்ட் தோட்ட சம்பவம் வரை எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இவை இந்தப் பத்திரிகை அறிக்கைகளை "நீரில் எழுதிய எழுத்துக்களாக்கி விட்டன"

றொத்ஸ்சைல்ட் தோட்டத் தொழிலாளர்கள் 21 நாட்கள் வேலைநிறுத்தம் செய்து தங்களது வருமானத்தை இழந்துதான் இந்த அநீதியான காணிப்பகிர்வை தற்காலிகமாக இடைநிறுத்திக் கொண்டார்களேயன்றி மேற்கூறப்பட்ட பத்திரிகை அறிக்கைகளின் அடிப்படையில் அல்ல.

அவர்கள் அவ்விதத்தில் போராடியதனால்தான் இப்பிரச்சினையை அம்பலப்படுத்த அவர்களினால் முடிந்தது. இல்லையேல் அத்தோட்டத்தில் அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் பாரிய சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைப் போல இப்பிரச்சினையும் மூடி மறைக்கப்பட்டிருக்கும்.

சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பாக பகிரங்கமாக செய்துகொள்ளப்பட்ட எழுத்து மூலமான உடன்படிக்கையில் ஒன்றைக் கூட முறையாக நடைமுறைப்படுத்திக்காட்டாத இந்நாட்டின் பேரினவாத அரசாங்கங்கள்எவ்வாறு இந்த வாய்மொழி மூலமான வாக்குறுதிகளை செயல்படுத்தப் போகிறது என்ற கேள்வி எழுவது இயல்பானது. மலையகத் தலைமைகள் அவ்வப்போது மக்களை ஏமாற்றுவதற்காக விடுக்கும் பத்திரிகை அறிக்கைகளைப் போன்று இவ்வாக்குறுதிகளுக்கு எவ்வித உத்தரவாதமும் இருப்பதாக தெரியவில்லை.

மலையகத்தில் காணிப்பகிர்வு என்பது இந்நாட்டு அரசியலிலும், ஆட்சியிலும் நிலவி வரும் இனவாத தன்மைகளிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கக் கூடிய ஒரு விடயமல்ல. எனவே இப்பிரச்சினைக்கான தீர்வானது இந்நாட்டின் பேரினவாத அடக்கு முறைக் கெதிரான செயற்பாடுகளிலேயே பெரிதும் தங்கியிருக்கின்றது.

இப்பிரச்சினை மேலும் தொடருமேயானால் இது மலையகத் தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கும், பாதுகாப்பிற்கும், சமூகப் பொருளாதார உரிமைகளுக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அபாயகரமான நிலைமைகளைத் தோற்றுவிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.






கே.ஜீ.பொடி அப்புஹாமி
தொழிலாளி

காணி முன்பு கொடுக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் காணி வழங்கப்படுகின்றது. காணி அற்றவர்களுக்கு அவை வழங்கப்படல் வேண்டும். இத்தோட்டம் அளவில் குறைந்து கொண்டே வந்ததன் காரணத்தினால் பெரும் வேலையில்லாப் பிரச்சினை உருவாகியிருக்கின்றது. இப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் மேலும் இத்தோட்டக் காணியை சுவீகரித்து பிரச்சினை அதிகரிக்கவே வழிவகுக்கும்.

இங்கு தமிழ், சிங்கள மக்கள் மிகவும் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். சிங்கள பத்திரிகைகள் கூறுவது போல எங்களிடம் இனவாத முரண்பாடுகள் கிடையாது பத்திரிகையில் தான் இனவாதம் காணப்படுகின்றது. இதற்கு இந்த வேலைநிறுத்தம் ஒரு உதாரணமாகும்.



வேலு இராசலிங்கம்
தோட்ட கமிட்டித் தலைவர்
ஐக்கிய தோட்ட தொழிலாளர் சங்கம்

தோட்டம் சிறிதாகிக் கொண்டே போவதால் இங்கு வேலையற்றோரும் கூடிக் கொண்டே போகின்றார்கள். வயது வந்த பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டியவர்களாக பெற்றோர் இருக்கின்றனர். வயது வந்தவர்களுக்கு வேலை வழங்கப்படுவதில்லை. பெண் பிள்ளைகள் திருமணம் செய்ய வாய்ப்பின்றி தவிக்கின்றார்கள். தொழில் செய்யாதவர்களை யாரும் திருமணம் செய்ய முன்வருவதில்லை.

எங்கள் சங்கத்தில் கணிசமான சிங்களத் தொழிலாளர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளார்கள். எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதை விடுத்து அப்பிரச்சினைகளை அதிகரிப்பதாகவே இந்த காணிப் பகிர்வு அமைந்துள்ளது. அதானல் தான் நாங்கள் வேலை நிறுத்தம் செய்து இந்த அநீதியை எதிர்த்தோம்.



கே. பொன்னுசாமி
தோட்ட கமிட்டித் தலைவர்
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

இத்தோட்டத்தில் காணி சுவீகரிக்கப்படுவதாக அரசாங்கம் பல மாதங்களுக்கு முன்னரேயே அரச வர்த்தமானி மூலம் அறிவித்திருந்ததாக இப்போது தெரிந்து கொண்டோம். ஆனால் இது விடயமாக எமது தொழிற்சங்கத்திடமிருந்து எமக்கு எதுவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை. அவர்கள் முன்கூட்டியே நடவடிக்கை எடுத்து எமக்கும் அறிவித்திருந்தால் இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்திருக்கலாம். நாங்கள் வேலை நிறுத்தம் செய்து எமது வருமானத்தையும் இழந்து போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.



எக்கநாயக்க முதியான்சலாகே விஜேசிறி
தொழிலாளி

நாங்கள் வேலை நிறுத்தம் செய்தது வேலை செய்யக்கூடிய காணி சுவீகரிப்பின் மூலம் எங்களது வேலை நாட்கள் குறைக்கப்பட விருப்பதினால்தான். இங்கு சிங்கள, தமிழ் பேதங்கள் கிடையாது. இதற்கு முன் மொனராகல பிரிவில் காணி கிடைக்கப்பட்டவர்களின் நிலங்களில் தமிழ் தொழிலாளர்கள் தான் கூடுதலாக தொழில் செய்கின்றார்கள். எங்கள் மூதாதையோரும் தோட்டங்களில்தான் வேலை செய்தார்கள். நாங்கள் இன்னும் லயன்களில்தான் வாழ்கின்றோம். காணிபகிர்ந்தளிக்கும்போது எல்லோருக்கும் நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டும்.



ஏ சுப்பிரமணியம்
தோட்ட கமிட்டித் தலைவர்
லங்கா ஜாதிக தோட்டதொழிலாளர் சங்கம்

இந்த தோட்டத்தில் 15 ஏக்கர் காணியை வெளியாருக்குப் பகிர்ந்தளிக்க ஏற்பாடுகளை மேற்கொள்ள மகாவலி அதிகார சபையின் அதிகாரிகளின் வருகையை தோட்ட நிர்வாகத்தின் மூலம் தான் நாங்கள் தெரிந்து கொண்டோம்.

அதன் பிறகு இத்தோட்டத்திலுள்ள எல்லா தொழிற்சங்க தலைவர்களும் ஒன்று கூடி கலந்துரையாடி எங்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி இது சம்பந்தமாக முடிவெடுக்க ஒரு வாரகால அவகாசம் வேண்டுமென மகாவலி அதிகாரிகளிடமும், பொலிஸாரிடமும் கேட்டிருந்தோம். அதற்கு சம்மதித்த இவர்கள் இரவோடிரவாக வாகனங்களில் கட்டிடப் பொருட்களைக் கொண்டு வந்து பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளில் வீடுகட்ட ஆரம்பித்தார்கள். இவை எல்லாம் ஒரு நொடிப் பொழுதில் நடந்து முடிந்து விட்டது. எங்களால் வேறொன்றும் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. எனவே நாங்கள் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தோம்.

# தேசிய விடுதலைப் போராட்டம் - ஒரு மீளாய்வு நோக்கி -

சென்ற இதழில் முதலாவது சிதைவிற்குப் பின்னரான தமிழ் இளைஞர் பேரவையின் செயற்பாடுகளின் மதிப்பீடுகள் பற்றி பார்த்தோம். இத் தமிழ் இளைஞர் பேரவை 1981 களின் ஆரம்பத்தில் மீண்டும் சிதைவுற்றது. இது பற்றி முன்னரும் கூறியுள்ளோம். **தமிழ் இளைஞர் பேரவையின்** முன்னணியில் கடமையாற்றிய **சந்ததியார், இறைகுமாரன், யோகநாதன், திலகவதி, வாசுதேவா** ஆகியோர் இளைஞர் பேரவையை விட்டு வெளியேறினர். இவர்களில் **இறைகுமாரன் யோகநாதன்** ஆகியோர் **'தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணி'** அமைப்பை உருவாக்கினர். சந்ததியார் காந்தீயம் நிறுவனத்தின் பணிகளில் இணைந்து அதன் அமைப்பாளராக பொறுப்பேற்றார். திலகவதி, பேபி சுப்பரமணியம் போன்றவர்கள் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், மனித முன்னேற்ற நடுநிலையம் என்பனவற்றுடன் இணைந்து அகதிகள் வேலைகளில் ஈடுபட்டனர். வாசுதேவா PLOT இயக்கத்தில் சேர்ந்து கொண்டார்.

தமிழ் இளைஞர் பேரவையின் இவ் இரண்டாவது சிதைவிற்குப் பின்னர் - தமிழ் இளைஞர் பேரவைக்கென தனியான ஒரு வரலாறு இருக்கவில்லை. அது மாவை சேனாதிராஜாவின் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு வாலிப முன்னணியாக மாறிவிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் கைப்பொம்மைகளாக இருந்த பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களை வைத்துக் கொண்டு சிறிது காலம் மாவை சேனாதிராஜா தமிழ் இளைஞர் பேரவையை நடத்தினார். **'இளைஞர் குரல்'** எனும் ஒரு பத்திரிகையையும் சிறிது காலம் நடத்தினார். பின்னர் அதுவும் நின்று விட்டது. அமைப்பு வேலைகளும் நின்று விட்டது. கூட்டணியினர் இந்தியாவிற்கு இடம் பெயர்ந்த பின்னர் இதிலிருந்த எச்சசொச்ச நபர்களைப் பயன்படுத்தி மன்னார் ஜெயராஜாவினாலும் அமிர்தலிங்கத்தின் மகனான பகீரதனாலும் **''தமிழர் தேசிய இராணுவம்''** எனும் இராணுவ அமைப்பு கட்டப்பட்டது. அதுவும் மன்னார் ஜெயராஜா புலிகளால் கைது செய்யப்பட்டு கொல்லப் பட்டபின் செயலிழந்து விட்டது.

## கூட்டணியில் உடைவு

தமிழ் இளைஞர் பேரவை இரண்டாவது தடவை சிதைவுற்ற அதே சமயம் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் ஒரு உடைவு ஏற்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மக்கள் 1977ம் ஆண்டு தேர்தலில் கொடுத்த ஆணையை மீறி விட்டார்கள் என்றும் எதுவித பயனும் அற்ற மாவட்ட அபிவிருத்தி சபைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏற்று தமிழ் மக்களின் போராட்டத்திற்கு துரோகமிழைத்துள்ளார்கள் என்றும் கூறி ஒரு குழுவினர் கூட்டணியிலிருந்து வெளியேறி **தமிழ் ஈழ விடுதலை அணி** எனும் அமைப்பை உருவாக்கினர்.. சுதந்திரன் **ஆசிரியர் கோவை மகேசன், ஈழவேந்தன், டாக்டர் தர்மலிங்கம், தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசன்** என்போர் வெளியேறியவர்களில் முக்கியமானவர்களாக விளங்கினர். உண்மையில் இவர்களின் வெளியேற்றம் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து கடைசியாக இருந்த தமிழ்த் தேசியவாதிகளும் வெளியேறியமையை அடையாளமிட்டுக் காட்டியது. அத்தோடு இந்நிகழ்வு தமிழர் விடுதலைக் கூட்டணியிடமிருந்து போராட்டத் தலைமை முற்றாகவே கைமாற்றப்படுகின்றமையையும் காட்டியது. இதன் பின்னர் போராட்டத்தின் வரலாற்றுப் பாத்திரம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இருக்கவில்லை. இலங்கை அரசு பாராளுமன்றத்தில் ஆறாவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து பாராளுமன்றப் பாதையையும் அடைத்தபின் நாட்டை விட்டு வெளியேறி தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுவதைத் தவிர, கூட்டணியினருக்கு வேறு வழி இருக்கவில்லை. இவர்கள் தமிழ்நாட்டிற்கு குடிபெயர்ந்த பின் இவர்களுக்கான போராட்டப் பாத்திரம் முற்றாக இல்லாமல் போய்விட்டது என்றே கூற வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து தமிழ் ஈழ விடுதலை அணி தோற்றம் பெற்றமை தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை அதற்கு பலமான அடியைக் கொடுத்தது. அவற்றில் முக்கியமானது தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரச்சாரப் பத்திரிகையாக விளங்கிய **'சுதந்திரன்'** பத்திரிகையை இழந்தமையாகும். இதனை ஈடு செய்வதற்காக அவர்கள் **''உதய சூரியன்''** என்ற பெயரில் ஒரு பத்திரிகையை ஆரம்பித்தாலும் அது சுதந்திரனைப் போல் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றதாக இருக்கவில்லை. தொடர்ந்தும் சுதந்திரன் பத்திரிகையே தமிழ் மக்களின் அபிமான பத்திரிகையாக திகழ்ந்தது. ஒரு விதத்தில் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசனின் எழுத்தாற்றலும் அதற்கு ஒரு காரணமாக அமைந்தது. சுதந்திரன் பத்திரிகையில் தொடர்ச்சியாக அரசியல் மடல் என்ற பெயரில் கோவை மகேசன் எழுதும் கடிதம் இது தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். பிற்காலங்களில் அலை, அலையாக இளைஞர் போராட்டத்தை நோக்கி வருவதற்கு சுதந்திரன் பத்திரிகையின் பிரச்சாரமும் பிரதான காரணமாக இருந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. உடைவிற்கு பின்னர் சுதந்திரன் பத்திரிகை கூட்டணியினரின் நடவடிக்கைகளை வெளிப்படையாக அம்பலப்படுத்தி எழுதியபோது அது தமிழ் மக்கள் மத்தியில் பலமான தாக்கத்தை உண்டு பண்ணிய ஒன்றாகவும் விளங்கியது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் போராட்டத்தை தொடர்ச்சியாக நடத்தக் கூடியவர்கள் அல்ல என்பதை அது வரை அரசியலில் முன்னணியில் நின்றவர்களே உணரத் தொடங்கினர். ஆனால் இக்காலத்தில் சாதாரண மக்களும் உணர ஆரம்பித்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து பிரிந்தவர்கள் தமிழ் இளைஞர் பேரவையிலிருந்து பிரிந்த தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணியினருடனும் இணைந்து பிரச்சார நடவடிக்கைகளில் இறங்கிய போது அது கூட்டணியினரை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கியது.

தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணி, தமிழ் ஈழ விடுதலை அணி இவற்றின் பிரச்சாரத்திற்கு புறம்பாக இக்காலத்தில் எழுச்சியுற்ற EPRLF இயக்கத்தின் மாணவர் அமைப்பான **ஈழமாணவர் பொது மன்றத்தின்** பிரச்சாரத்திற்கும் கூட்டணியினர் முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அமிர்தலிங்கத்தைப்போல சிறந்த பேச்சாற்றலுடைய ஈழமாணவர் பொதுமன்ற செயலாளர் **மு.டேவிற்சன்** கூட்டணியினரை அம்பலப்படுத்துவதில் மிக தீவிரமாக இருந்தார். பாடசாலை மாணவர் மத்தியில் செல்வாக்குப் பெற்ற அமைப்பாக விளங்கிய ஈழமாணவர் பொது மன்றத்தின் பிரச்சாரத்திற்கு முகம் கொடுக்க கூட்டணியினர் பல தடவை அல்லல்பட்டனர். மேதினக் கூட்டங்களில் அமிர்தலிங்கத்தின் உரையைக் கேட்க வரும் மக்கள் தொகையிலும் பார்க்க டேவிற்சனின் உரையைக் கேட்க வரும் மக்கள் தொகையினர் இக்காலகட்டத்தில் அதிகமாக இருந்தது.

அரசியல் அமைப்புகளில் இருந்து வந்த எதிர்ப்புகளுக்கு புறம்பாக ஆயுத அமைப்புகளிடமிருந்து எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டிய காலகட்டமாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அக்காலகட்டம் அமைந்திருந்தது. அப்போது ஆயுத அமைப்பாகவிருந்த தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் அதுவரை அரசியல் வேலைகளில் கவனம் செலுத்தவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ் இளைஞர் பேரவையும் அவ்வேலையைச் செய்யக் கூடியதாக இருப்பதால் இராணுவத்தைக் கட்டும் வேலைகளை மாத்திரம் தாம் மேற்கொண்டால் போதுமானது என்றே அவர்கள் கருதியிருந்தனர். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்று அரசியல் ரீதியாக தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்க முற்பட்டதைத் தொடர்ந்து அரசியல் வேலைகளையும் தாம் முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். இக்கால கட்டத்தில் இவ்இயக்கம் உடைவுற்று இரு குழுக்கள் தோன்றியிருந்தன. இவ் இரு குழுக்களும் தமது அரசியல் பணிகளுக்காக **'உணர்வு' 'புதியபாதை'** என்கின்ற இரு பத்திரிகைகளை நடாத்தின. இவ்விரு பத்திரிகைகளும் தமது இதழ்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரை காரசாரமாக கண்டித்தனர். இவ்வாறு சகல பக்கங்களிடமிருந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்நோக்கி வந்த எதிர்ப்புக்களே கூட்டணியினரை போராட்டத்திலிருந்து விரட்டியது எனலாம்.

இதற்குப் பின்னர் போராட்டத்தின் தலைமைப்பாத்திரம் முழுக்க முழுக்க இளைஞர் இயக்கங்களிடமே விடப்பட்டிருந்தது.

## இனப்பிரச்சினையை நோக்கி இடதுசாரிகள்

தமிழ் தேசிய அரசியல் பக்கங்களிலிருந்து எழுச்சியுற்ற இவ் மாற்றங்களுக்கு புறம்பாக தமிழ்ப் பகுதிகளில் நிலைபெற்றிருந்த இடதுசாரிக் கட்சிகளிடமிருந்தும் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக கருத்தியல் ரீதியாக மாற்றம் ஏற்பட்டது. இம் மாற்றங்களும் கருத்து மோதல்களும் பெருமளவில் **சண்முகதாசனின்** தலைமையிலான **சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியைச்** சேர்ந்தவர்களிடையே ஏற்பட்டது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குறிப்பாக வடபகுதியில் கணிசமான செல்வாக்கைப் பெற்ற கட்சியாகவும் கணிசமான அளவு முன்னணியினரைக் கொண்ட கட்சியாகவும், இக்கட்சியே விளங்கியிருந்தது. குடாநாட்டிற்குள் தாழ்த்தப்பட்ட மக்களிடையே செல்வாக்குப் பெற்ற இக்கட்சி உரும்பிராய், புத்தூர், சங்கானை, வடமராட்சி பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தது. காலப்போக்கில் இப்பகுதி மக்களிடையே தேசிய இனப்பிரச்சினை தொடர்பான கேள்விகள் எழுந்தபோது அமைப்புக்குள்ளேயும் அப்பிரச்சினை எழுந்தது. அமைப்பிலிருந்து பல்வேறு பிரச்சினைகளாலும் வெளியேறியவர்கள் தேசிய இனப்பிரச்சினை பற்றியும் அக்கறைப்பட ஆரம்பித்தனர். இவ்வாறு அக்கறைப்பட்டவர்களில் **கௌரி காந்தன்** தலைமையிலான குழுவினரும், **விஸ்வானந்த தேவன்** தலைமையிலான குழுவினரும் முக்கியமானவர்களாக விளங்கினர். கௌரி காந்தன் குழுவினர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வறிய கூலி விவசாயிகள் மத்தியில் **கிராமிய உழைப்பாளர் சங்கம்** எனும் அமைப்பை உருவாக்கினார். ஆரம்பத்தில் இவ்வமைப்பு வறிய கூலி விவசாயிகளின் பிரச்சினைகளை மையமாக வைத்து இயங்கினாலும் காலப்போக்கில் கௌரிகாந்தன் அமைப்பை விட்டு வெளியேறிய பின் அமைப்பினைப் பொறுப்பேற்ற **சின்னராசா, ராஜரத்தினம் (மார்க்கண்டு)** போன்றவர்கள் தேசிய இனப்பிரச்சினையிலும் அமைப்பை அக்கறை கொள்ளத் செய்தனர். இவர்களால் மேடையேற்றப்பட்ட **'சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்''** எனும் நாடகம் ஆரம்பத்தில் வறிய கூலி விவசாயிகளின் பிரச்சினைகளை கருப்பொருளாக கொண்டிருந்தாலும் பிற்காலங்களில் அதனை மேடையேற்றும் போது தேசிய இனப்பிரச்சினைகளையும் அதில் இடம்பெறச் செய்தனர். தேசிய இனப்பிரச்சினை தொடர்பான போராட்டங்களில் தாமும் பங்குபற்றினர். தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக யாழ் பல்கலைக்கழகம் நடாத்திய போராட்டங்களில் வறிய கூலி விவசாயிகளும் கணிசமான அளவு பங்குபற்றியமைக்கு இவர்களுடைய பங்களிப்பே பிரதான காரணமாக அமைந்தது. எண்பதுகளின் முற்பகுதியில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தனிநாடுதான் என்பதை இவர்களும் அங்கீகரித்திருந்தனர்.

விஸ்வானந்த தேவன் தலைமையிலான மற்றைய குழுவினர் 1976 இல் **தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி** எனும் அமைப்பை உருவாக்கியிருந்தனர். தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதே அமைப்பின் நோக்கமாக இருந்தது. காலப்போக்கில் இவ்வமைப்பிலும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு தனிநாடுதான் என முடிவெடுக்கப்பட்டு அதற்கான கொள்கை வேலைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. 1983 இல் இவ்வமைப்பு தனது பெயரை **தமிழ் ஈழ விடுதலை முன்னணி (NLFT)** என மாற்றிக் கொண்டது.

இவர்களைவிட தமிழர் விடுதலைக்கூட்டணி அரசியலின் ஊடாக அரசியலுக்கு வந்தவர்களில் ஒரு பகுதியினரும் இக்காலகட்டத்தில் இடதுசாரி கொள்கைகளை வரித்துக் கொண்டும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமது அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினர். **ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப்புரட்சி அமைப்பு** என்பனவே இவ்வாறு தமிழ்த்தேசிய அரசியலில் இருந்து இடதுசாரி சித்தாந்தங்களை வரித்துக் கொண்ட அமைப்புக்களாகும்.

பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளிலும் இக்காலகட்டத்தில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. இக்கட்சிகளில் ஒன்றான நவசமசமாஜக் கட்சி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்ததுமல்லாமல் அதன் வழி தமிழ் தேசிய இனத்தின் தனிநாட்டுக் கோரிக்கையையும் அங்கீகரித்திருந்தது. இது தொடர்பில் தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கையை அங்கீகரித்த ஒரே ஒரு தென்னிலங்கை கட்சியாகவும் இக்கட்சியே இன்றுவரை விளங்குகின்றது. 1979இல் தமிழ்த் தேசிய விடுதலைப் போராளியான **இன்பம் விசுவஜோதிரத்தினமும்,** அவரது மைத்துனரான **செல்வரத்தினமும்** யாழ் பண்ணை வீதியில் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டபோது அதனை எதிர்த்து கொழும்பில் சவப்பெட்டி ஊர்வலத்தையும் இக்கட்சி நடத்தியது. அத்தோடு தனது மேதினக் கூட்டங்களில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோசங்களுக்கு முக்கிய இடம் அளித்ததுமல்லாமல் தமிழ் தேசிய இனப்போராட்டங்களில் முழுமையாக ஈடுபடும்படி தமது அமைப்பின் வடபகுதிக் கிளைக்கும் உத்தரவிட்டிருந்தது.

இவ்வாறு தமிழ் தேசிய இனப்பிரச்சினையில் விசுவாசமாக முடிவெடுத்த தென்னிலங்கைக் கட்சியாக இக்கட்சி இருந்த போதும் தமிழ் மக்கள் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றிற்கு கொடுக்கின்ற ஆதரவு கூட இக்கட்சிக்கு கொடுக்காததுதான் கவலைக்குரியது. எனினும் கடந்த உள்ளூராட்சி சபைத்தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு இக்கட்சியிலிருந்து ஜீவரத்தினம் எனும் தமிழர் தெரிவு செய்யப்பட்டமை சிறிது திருப்தியளிப்பதாகவுள்ளது.

ஏனைய இடதுசாரிக் கட்சிகள் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் சுய நிர்ணய உரிமை என்ற அளவிற்கு வராவிட்டாலும் கூட அதன் வடபகுதி அமைப்புக்கள் தேசிய இனப் போராட்டங்களில் தங்களையும் இணைத்துக் கொண்டனர். குறிப்பாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ) பிரிவு இது தொடர்பில் கூடிய அக்கறையுடன் போராட்டங்களில் கலந்து கொண்டது. எனவே நுணுக்கமாக அவதானிப்பின் எண்பதுகளின் ஆரம்பம் தமிழர் அரசியலில் ஒரு மாறும் காலகட்டமாக இருந்தது. இம்மாறுதலின் தாக்கம் தமிழ் மக்களிடத்தே அரசியல் பணி புரிந்த எல்லா அமைப்புக்களிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியது. காலத்தின் தேவைக்கேற்ப அமைப்புக்களின் கொள்கை நடைமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துமாறும் இம்மாறுதல்கள் நிர்ப்பந்தித்தன. இதனால் இவ்வரலாற்றுத் தேவைகளோடு ஒட்டிப்போக முயற்சித்தவர்கள் தொடர்ந்தும் இயங்கக்கூடிய நிலை ஏற்பட்டது. வரலாற்றுத் தேவையை புறக்கணித்தவர்கள் தமிழ் மக்களிடமிருந்து அன்னியப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி இதற்கு சிறந்த உதாரணமாகும்.

**அன்னபூரணா**

சரிநிகர் மதிப்பீட்டு அரங்கு செப் 19ம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ன மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. அது தொடர்பான குறிப்புக்கள் அடுத்த இதழில் வெளியாகும். கூடவே ஒக் 9, 10ம் திகதிகளில் இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துவத்துக்குமான இயக்கத்தின் அனுசரணையுடன் 'விடிவி' மாற்றுக் கலாசார நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுதந்திர சாகித்திய விழா பற்றிய குறிப்பும் அடுத்த இதழில் வெளியாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் - முஸ்லிம் மோதல் சிங்களப்

# பேரினவாதத்திற்குப் பலம் சேர்க்கிறது

**இலங்கை அரசியல் வரலாற்றில் உருவாகி வந்த முஸ்லிம் தலைமைகள் முஸ்லிம் மக்களது நலன்கள் பற்றிய அக்கறையின்றி எப்போதும் தென்னிலங்கை சிங்களப் பேரினவாதக் கட்சிகளுடன் சேர்ந்து தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கெதிராகச் செயற்பட்டு வந்துள்ளனர் என்றும் ஆளும் பேரினவாத அரசுக்கெதிராக முதலாவது சிறுபான்மை இனம் போராட்டம் நடாத்தும் நாடுகளில் இரண்டாவது சிறுபான்மை இனத்தை முதலாவது சிறுபான்மை இனத்துடன் மோதவிடும் அரசியல் தந்திரோபாயமே இதுவென்றும் கூறப்படுவது பற்றி தங்களது அபிப்பிராயம் என்ன?**

இக்கேள்வியில் இரண்டு விடயங்கள் அடங்கியுள்ளன. முதலாவது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கெதிராக முஸ்லிம் தலைமைகள் முஸ்லிம் மக்களின் நலன்களில் அக்கறையில்லாது தென்னிலங்கை சிங்கள பேரினவாதத்துடன் சேர்ந்து செயற்படுவது, இரண்டாவது - ஆளும் பேரினவாத அரசுக்கெதிராக முதலாவது சிறுபான்மையினர் போராட்டம் நடாத்தும் பொழுது இரண்டாவது சிறுபான்மை இனத்தை அதனுடன் மோதவிடும் அரசின் தந்திரோபாயத்திற்கு உள்ளாவது என்பனவேயாகும். வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்பொழுது சிங்களத்தை அரசகரும மொழியாக்கும் சட்ட மசோதா விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது காலஞ்சென்ற சேர் ராஸீக் பரீத் அவர்கள் மட்டுமே அதற்கு ஆதரவாக சிங்கள பேரினவாதிகளுடன் சேர்ந்து இயங்கினார். இதற்குப் பல காரணங்கள் உண்டு. 56 களில் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு மூன்று முஸ்லிம்கள் தெரிவான பொழுது அவர்கள் யாழ்ப்பாண வெள்ளாளத் தமிழர்களால் திருப்பியனுப்பப்பட்டனர். கல்முனையிலிருந்து முஸ்லிம் டி.ஆர்.ஓ. ஒருவர் அங்கு சென்றபொழுது அவரும் பலவந்தமாகத் திருப்பியனுப்பப்பட்டார். இந்தச் சம்பவங்களே மேற்படி சேர் ராஸீக் பரீத் முழுத் தமிழ் சமூகத்திற்கெதிராக முடிவெடுக்கத் தூண்டின என்பது வரலாற்று ஆசிரியர்களின் அபிப்பிராயமாகும். இதேகால கட்டப் பகுதியில் முன்னாள் கேட் முதலியார், எம்.எஸ்.காரியப்பர், முன்னாள் அமைச்சர் எம்.எம். முஸ்தபா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சி.அகமது, முன்னாள் செனட்டர் மசூர் மௌலானா, முன்னாள் பாராளுமன்ற பிரதிநிதி எம்.ஈ.எச். முகம்மதலி போன்றவர்களின் அரசியல் ஆரம்பமே தமிழரசுக் கட்சியினூடாகவும் அதன் பிற்பாடு தமிழரசுக் கட்சி ஆரம்பித்த பின்னர் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம், காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம் போன்றவற்றினூடாகவே இருந்தது. எனவே முஸ்லிம் தலைமைகள் தமிழர்களின் ஆரம்ப விடுதலைப் போராட்டங்களுக்கு எதிராக இருந்தனர் என்பது உண்மையில்லை. தற்கால அரசியலில் முஸ்லிம் தலைமைகளின் நடவடிக்கைகள் ஓரளவு தமிழ் எதிர்ப்பு சார்ந்ததாகவே உள்ளது. உதாரணமாக சபாநாயகர் எம்.எச்.முஹம்மது, அகில இலங்கை முஸ்லீம் லீக் தலைவர் டாக்டர் எம்.சி.எம்.கலீல் போன்றவர்களும் மற்றும் அகில இலங்கை சோனகர் சங்கம், முஸ்லிம் தகவல் நிலையம் போன்ற இயக்கங்களும் தமிழர்களின் தென்னிலங்கையிலிருந்து பிரிந்து வாழும் சுயநிர்ணய உரிமையை மட்டுமல்ல தமிழர்களின் ஆகக்குறைந்த கோரிக்கையான வட-கிழக்கு இணைப்பைக் கூட எதிர்க்கிறார்கள் என்பது அண்மைக்கால நடவடிக்கைகளிலிருந்து தெளிவாகிறது.

56 களில் சேர் ராஸீக் பரீத் 'சிங்களம் மட்டும்' மசோதாவில் தென்னிலங்கை சிங்கள பேரினவாத சார்பு நிலைப்பாட்டை எவ்வாறு எடுத்தாரோ அதே போன்று அண்மைக்கால அரசியலில் மேற்படி தலைவர்களும் இயக்கங்களும் 'தமிழ் எதிர்ப்பு' நிலைப்பாட்டை எடுக்க பல காரணிகள் உள. முக்கியமானது முஸ்லிம்களுக்கெதிரான விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளாகும். புலிகள் ஏன் முஸ்லிம் சமூகத்திற்கெதிராக தமது துப்பாக்கிகளை திருப்பினார்கள் என்பதற்கும் பல காரணிகள் உள. அவற்றை பின்னர் கூறுகிறேன்.

'ஹம்லட்' நாடகம் இளவரசன் 'ஹம்லட்' இல்லாமல் எவ்வாறு மேடையேற்றப்பட முடியாதோ அதேபோன்றுதான் இலங்கை அரசியல் வரலாற்றில் இனப்பிரச்சினை பற்றி ஆராயும்பொழுது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பங்களிப்பு பற்றியும் அதன் நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்வது தவிர்க்கமுடியாத தொன்றாகும்.

ஏழு தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை இருப்பது போன்று முஸ்லிம்களுக்கும் குறிப்பாக வட-கிழக்கு வாழ் முஸ்லிம்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்ற அடிப்படையில் 'முஸ்லிம் மாகாண சபை' ஒன்றையும் கேட்கிறது. ஆரம்பத்தில் 'அம்பாறை' மாவட்டத்தில் மாத்திரமே முஸ்லிம் மாகாணசபை அமையவேண்டும் அதில் வடகிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேச சபைகளின் தலைவர்கள் சாதாரண உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் இணக்கத்திற்கு வந்து தமிழ்க்கட்சிகளை அளவிலா சந்தோசத்திற்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளாக்கிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் திடீரென தமது நிலைப்பாட்டை மாற்றி தமிழ்க் கட்சிகள் முற்று முழுதாக ஏற்றுக்கொள்ள முடியாத கோரிக்கையை முன்வைத்து, பேச்சுவார்த்தைகளை ஸ்தம்பிக்கச் செய்தமைக்கு காரணம் 'பெரியவரின் பந்தை' விழுங்கிய செயலாகுமென சிலர் சந்தேகங் கொள்ளும்பொழுது 'த ஐலண்ட்' பத்திரிகையில் - 'தாரகி' இவ்வாறு கூறுகிறார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தமிழ்க்கட்சிகளுடன் பேசி சமாதானத் தீர்வுக்காக உழைப்பது போன்று பாசாங்கு செய்து இறுதியில் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதே அவரது திட்டமாகும் என எழுதியிருந்தது கவனத்திற்கெடுக்கப்பாலது. பேரினவாதக் கட்சியின் 'பந்தை' விழுங்கிக் கொண்டு செயற்பட்டாலுங்கூட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தென்னிலங்கை வாழ் மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்களின் நலன்களுக்கு எக்கேடு நேர்ந்தாலும் வட-கிழக்கு இணைப்பைக் கைவிடப் போவதில்லை. இங்குதான் தமிழ்க்கட்சிகள் நியாயமாக நடந்து கொண்டு பேரினவாதத்திடமிருந்து தாம் பெறப்போகும் அதிகாரத்தை தமது சிறுபான்மையினமான முஸ்லிம்களுடன் பகிர்ந்து கொண்டு சமாதானமாக வாழ திடசங்கற்பம் பூண வேண்டும்.


அடுத்த அம்சம் ஆளும் பேரினவாத அரசுக்கெதிராக முதலாவது சிறுபான்மையினம் போராடும் பொழுது இரண்டாவது சிறுபான்மை யினத்தை 'செல்லப் பிள்ளை' யாகப் பாவித்து முதலாவது சிறுபான்மையினத்துடன் மோதவிடும் தந்திரோபாயம் பற்றியது. இக்கருத்து எல்லா நாடுகளுக்கும் பொதுவானதல்ல. உதாரணமாக, யூகோஸ்லாவியாவில் இன்று நடப்பதென்ன? சேர்பியர்களின் யூகோஸ்லாவிய பேரினவாத அரசுக்கெதிராக குரேசிய சிறுபான்மையினரும், பொஸ்னிய முஸ்லிம்களும் ஒன்றிணைந்து போராட்டம் நடத்திக்கொண்டிருக்கின்றனர். இந்தியாவில் பெரும்பான்மை இந்துக்களின் ஆட்சிக்கெதிராக பஞ்சாப் சீக்கியர்களும், காஷ்மீர் முஸ்லிம்களும் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் இந்தியாவிலுள்ள தமிழர்களும் 'தனிநாடு' கோரிப் போராடலாம்.

ஒரு நாட்டில், முதலாவது இரண்டாவது சிறுபான்மையினங்களின் அரசியல் அபிலாசைகள் ஒன்றுக்கொன்று முரண்படும் பொழுது மேற்படி உங்களின் கருத்து உண்மையாகலாம். இலங்கையில் கூட, தற்போதைய சூழ்நிலைகளில் உங்கள் கருத்து உண்மையானதாகவே தோன்றுகிறது. ஆனால் இந்நிலைமைக்கு இரண்டாவது சிறுபான்மையினரான முஸ்லிம்களையோ அல்லது முஸ்லிம் தலைமைகளையோ மட்டும் குறைகூறிப் பயனனில்லை. தமிழர்களும் முஸ்லிம்களுக்கெதிரான முரண்பாட்டை உருவாக்குவதில் ஓரளவு வெற்றி கண்ட பேரினவாதத்துடன் ஒத்துழைத்துள்ளனர். உண்மையான விடுதலைக்காகப் போராடாமல் சுயநல அரசியல் அதிகாரத்திற்கெதிராக தமக்கிடையே சண்டை பிடித்துக் கொண்டிருக்கும் தமிழ் இயக்கங்களின் முரண்பாடும், சுயநல முஸ்லிம் தலைமைகளுக்கிடையே உருவாகியிருக்கும் முரண்பாடுகளும் இறுதியில் தமிழ்-முஸ்லிம் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளன.

**தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லீம்களைத் தொடர்ந்து கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்திற்கு முஸ்லிம்கள் முட்டுக்கட்டை போடலாமா?**

முஸ்லிம்கள் முன்னுதாரணமாகக் கொள்ளக் கூடிய இஸ்லாமிய வரலாற்றில் கூட இது இடம்பெறவில்லை. ஒரு சமூகத்தில் ஒரு பிரிவினர் செய்கின்ற அடாவடித் தனங்களுக்கு முழுசமூகத்தையும் குறை கூறுவது அல்லது அச்சமூகத்தின் அபிலாசைகளுக்கு முட்டுக்கட்டை போடுவது சரியான அரசியல் நிலைப்பாடாகாது. முஸ்லிம்கள் என்றால் 'நடுநிலையானவர்கள்' என்ற அர்த்தமும் உண்டு. இந்நடுநிலை தவறும்பொழுது முஸ்லிம்கள் இம்சைப்படுத்தப்பட்ட சம்பவங்களே அனேகம் உள.

தமிழ் மக்கள் தமது போராட்டத்தை இன்று நேற்று தொடங்கியவர்கள் அல்ல. 50 களிலிருந்தே அவர்களது போராட்டம் ஆரம்பமாயிற்று - சுயநல அரசியல் வாதிகள் தமிழ் மக்களுக்கெதிரான பெரும்பான்மை பேரினவாதத்தின் அடக்குமுறையை தமது வாக்கு வேட்டைகளுக்காகப் பாவித்தாலும் தமிழ் மக்களுக்கு அடிப்படைப் பிரச்சினைகள் இருந்தன. பாரதப் போர் ஏன் எழுந்தது? நியாயம் நிலைநாட்டப்படத் தவறியபொழுதுதான் பாரதப் போர் நிகழத் தொடங்கியது பஞ்ச பாண்டவர்கள் தாம் இழந்த நாட்டைக் கேட்டார்கள். அது மறுக்கப்படவே - ஐந்து ஊர்களாவது தாருங்கள் எனக் கேட்டார்கள் - அதுவும் மறுக்கப்படவே ஐந்து வீடுகளாவது தாருங்கள் எனக் கேட்டார்கள். எல்லா நியாயமான கோரிக்கைகளும் தட்டிக்கழிக்கப்படவே போரில் குதிக்கத்தொடங்கினர். இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டம் மேற்கண்ட உதாரணத்தில் கூறப்பட்ட நியாயத்தின் அடிப்படையிலேயே உருவானதாகும். துரதிர்ஸ்டவசமாக தமிழ் விடுதலைப் போராளிகளில் சிலரின் 'இனவாத' போக்குகள் காரணமாக இன்று தமிழர்களின் தார்மீகப் போராட்டம் வெறும் 'வெறிப்போராட்டமாக திசை திரும்பியுள்ளது. விடுதலைப் போரில் ஆயுதம் தாங்கிப் போராடும் போராளிகள் பேரினவாத அரசுகளின் சதிப்போக்கு, தமிழ் முஸ்லிம் தலைமைகளின் சுயநல அதிகார வெறிப்போக்கு போன்றவற்றிற்கெதிராக ஆயுதபாணியான தமது போராளிகளை அரசியல் மயப்படுத்தவும், தமிழ்-முஸ்லிம் சமூக ஒற்றுமையை ஏற்படுத்தவும் தவறிவிட்டன. தமிழர் விடுதலைப் போராட்டம் நலிவடைய இதுவே முக்கியமான காரணமாகும்.



யூ.எம்.நிஸார்

சட்டத்தரணி யூ.எம். நிஸார் கிழக்கிலங்கை இஸ்லாமிய இளைஞர் முன்னனியின் நிறுவுனர். கிழக்கிலங்கை இஸ்லாமிய இளைஞர் முன்னனி எந்த வகையான இனவாதத்திற்கும் எதிராக குரல் கொடுத்து வரும் ஒரு அரசியல் இயக்கம் என்பதோடு, முஸ்லிம் இளைஞர்களை ஒரு ஆரோக்கியமான அரசியலை நோக்கி வழிநடாத்த வேண்டும் என்பதிலும், தமிழர் - முஸ்லிம்களது ஒற்றுமையின் யதார்த்தமான தேவை உணர்த்தப்பட வேண்டும் என்பதிலும் அக்கறையுடன் செயற்பட்டு வரும் ஒரு இயக்கமாகும்.

**கிழக்கில்-தமிழ் மக்களுக்கெதிராக முஸ்லிம் மக்களிடையே 'ஜிஹாத்' படை இயங்குவதாகவும் அது அப்பாவித் தமிழ் மக்களை அரச படைகளுடன் சேர்ந்து கொலை செய்து வருவதாகவும் தமிழ் இயக்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றனவே. இது பற்றிய தங்களது அபிப்பிராயம் என்ன?**

'ஜிஹாத்' என்ற சொல் மதச்சார்பிலான பொருளைக் கொண்டிருப்பதால் இஸ்லாமிய வரலாற்றில் 'ஜிஹாத்' பற்றிய முக்கியத்துவத்தினை சிறிது குறிப்பிடுவது கடமையாகும். முதலில் 'ஜிஹாத்' என்பது வெறும் ஆயுதந்தாங்கிய போராட்டத்தினையோ அல்லது வெறும் தற்கொலைப் போராட்டமாகவோ அமையவில்லை. மாறாக 'ஜிஹாத்' என்பது அர்த்தங்களைக் கொண்டதாகவும். பலமான அடிப்படைக் கருத்தைக் கொண்டதாகவும் விளங்குகிறது. நல்லது செய்தல், நியாயமாகச் சிந்தித்தல், நியாயமாகப் பேசுதல், நீதிக்காகப் போராடுதல். தமது சக்திக்குட்பட்ட வரை வாயாலும் நாவாலும் தேவையேற்படின் ஆயுதம் ஏந்தி நீதியை நிலைநாட்டப் போராடி உயிர் துறத்தல் போன்றவை ஆதிகால அறநெறிப் போராட்டங்களுடன் ஒன்றுபட்ட தன்மை கொண்டனவாகத் தென்படுவதால் 'ஜிஹாத்' இஸ்லாத்திலும் முஸ்லிம்களின் வாழ்விலும் தனிப்பெரும் அம்சமாகத் திகழ்கிறது. இப்படியான வரலாற்றுச் சம்பவங்கள் ஒரு புறமிருக்க 'ஜிஹாத்' என்ற அம்சம் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் புகுந்தது ஒரு தற்செயலான நிகழ்ச்சியே - தமிழ் முஸ்லிம் சமூகங்களைப் பிரித்து வைத்து தமது காரியத்தைச் சாதிக்க வேண்டிய தேவை அன்றைய ஜே.ஆர். ஜெயவர்த்தன. அரசுக்கு இருந்த வேளையில் முஸ்லிம் இளைஞர்கள் தமிழ் இயக்கங்களுடன் சேர்ந்து ஆயுதப்பயிற்சி பெற்று அவர்களுக்கு எதிராக திரும்பி விடுவார்களோ என்ற அச்சம் உள்ளூர் முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கு இருந்தது. இந்தப் பின்னணியில் முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சரான திரு. லலித் அத்துலத் முதலி என்பாரே முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சியளிக்குமாறு ஆயுதப் படையினரை உத்தரவிட்டார். இதுவே 'ஜிஹாத்' அமைப்பாக மக்களால் பேசிக்கொள்ளப்பட்டது. இந்த அமைப்புக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரஃப்புக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அவ்வாறு தொடர்பு இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் திரு. அன்டன் பாலசிங்கம் 14/08/92 ஏசியா வீக்கில் குறிப்பிட்டிருப்பது உண்மைக்கு முரணானது. அஸ்ரஃப் வெறும் 'காட்போட்' தலைவராக தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாரே தவிர ஒரு சதவீத முஸ்லிம் இளைஞர்களைக் கூட 'ஜிஹாத்' அமைப்பின் மூலம் ஒன்று சேர்க்க அவரால் முடியாது. அதே நேரத்தில் - தமிழ் இயக்கங்கள் கூட 'ஜிஹாத்' அமைப்பு பலமடைய உதவிகள் புரிந்துள்ளன என்பதை மறுக்க முடியாது. தமிழ் இயக்கங்களில் சேர்ந்து ஆயுதப் பயிற்சி புரிந்த இலங்கை முஸ்லிம் இளைஞர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டதாலும், தமிழ் இளைஞர்களின் ஆயுதங்கள் முஸ்லிம் சமூகத்திற்கெதிராக திரும்பியதாலும் நூற்றுக்கு தொண்ணூறு வீதமான முஸ்லிம் இளைஞர்கள் தாம் சார்ந்திருந்த தமிழ் இயக்கங்களிலிருந்து விலகி 'ஜிஹாத்' அமைப்புடன் சேர்ந்து இயங்கத் தொடங்கினர். இதுவே பின்னர் தமிழ் இயக்கங்களின் மத்தியிலும் தமிழ் மக்கள்

→ பார்க்க பக்கம் 10

# முஸ்லிம்கள் துரோகிகள் ஆனார்களா ? ஆக்கப்பட்டார்களா?

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பமான போது கிழக்கின் சில முஸ்லிம் வாலிபர்களும் தமிழ் இயக்கங் களுடன் இணைந்திருந்தனர் என்பது உண்மை. காரணம். சிங்கள பேரினவாதத்தினால் தமிழர்களும், முஸ்லிம்களும் பெரும்பாலும் ஒரே மாதிரியான சவால்களுக்கே முகம் கொடுத்துக் கொண்டிருந்தனர்.ஆனால் 1980 களிலேயே தமிழ் இயக்கங்கள் தாம் சார்ந்த இயக்கங்களுக்காக கப்பம் பறிக்க முற்பட்டன. ஆட்டைக் கடித்து, மாட்டைக்கடித்து, வயல் வெளிக்குச் சென்று புல் பிடுங்கி வாழும் முஸ்லிம் பெண்களிடமும் கப்பம் பறிக்கத் தொடங்கினர். கப்பம் தர மறுத்தவர்கள் தாக்கப்பட்டனர். இவை விரிவடைந்த போதுதான் முஸ்லிம்கள் தமிழ் இயக்கங்களை இனம் காணத் தொடங்கினர். தூரத்து எதிரியை விட பக்கத்து எதிரியை முதலில் சமாளித்தாக வேண்டும் என்ற ஞானம் முஸ்லிம்களுக்கு ஏற்படத் தொடங்கியது.

தமிழ் குழுக்களின் அடாவடித்தனங்கள் முஸ்லிம் கிராமங்களில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்த போது, தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை முஸ்லிம் சமூகம் உணரத் தொடங்கியது.

இத்தகைய அடாவடித்தனங்கள் பரிமாணம் பெற்று 1984ல் பாரிய தமிழ், முஸ்லிம் இனக்கலவரமாக வளரச்சி பெற்றது.இக்கலவரமும் இதில் ஆயுதமேந்திய தமிழர் குழுக்களும் செயல்பட்ட விதமும் தமிழ்க்குழுக்களின் துரோகத் தன்மை, அவர்கள் நம்பிக்கை வைக்கப்படுவதற்கு கொஞ்சமும் அருகதையற்றவர்கள் என்பதை முஸ்லிம்களுக்கு காட்டியது. இதனைத் தொடர்ந்து தமிழ் இயக்கங்களுடன் இணைந்திருந்த முஸ்லிம் வாலிபர்களில் கணிசமானோர் விலகத் தொடங்கினர்.

தமது இயக்கங்களிலிருந்து முஸ்லிம்கள் விலகுவதை துரோகம் என்ற அக்குழுக்கள் தமது சமூகம் தமிழ் குழுக்கள் மீது வைத்திருந்த நம்பிக்கைகள் சின்னா பின்னமாகியதன் எதிரொலியே இத்தகைய விலகல்கள் என்பதை புலிகள் உட்பட அனைத்து தமிழ் குழுக்களும் தெரிந்திருந்தும் ஜீரணிக்க மறுத்து விட்டன. இவ்வாறு விலகிய முஸ்லிம் வாலிபர்களை தமிழ் குழுக்கள் சுட்டுக்கொல்ல ஆரம்பித்த போது முஸ்லிம் சமூகம் தமிழ் குழுக்களை மேலும் வெறுக்க ஆரம்பித்தது.

இவற்றின் எதிரொலியாக மேலும் தமிழ், முஸ்லிம் மோதல்கள் விரிவடையத் தொடங்கின. இக்காலகட்டத்தில் தமிழ் ஆயுத குழுக்களின் மத்தியில் போட்டி மனப்பான்மை அதிகரிக்கத் தொடங்கியது. முஸ்லிம்களை படுகொலை செய்வதில் யார் தீவிரமானவர் என்பதை எடுத்துக்காட்டச் செயல்படுவது போல் இவை இருந்தன,. டெலோ, ஈபிஆர் எல் எப் என்பன முஸ்லிம்களைக் கொலை செய்தால் புலிகள் கண்டன அறிக்கை வெளியிடுவதும், புலிகள் முஸ்லிம்களைக் கொலை செய்தால் டெலோ, ஈ பி ஆர் எல் எப் என்பன கண்ணீர் விடுவதும்' வழமையாகத் தொடங்கின. இந்நிலையில் இந்திய இராணுவம்.வந்தது.

இந்திய இராணுவத்துக்கும் -புலிகளுக்குமிடையிலிருந்த சல்லாபம் அலுத்த பின் ஒருவரோடொருவர் மோதல்கள் ஆரம்பமான போது, இந்தியா மீது முஸ்லிம்களுக்கிருந்த ஆத்திரத்தினாலும், இந்திய இராணுவத்தின் அனுசரணையுடன் தமிழ் குழுக்களின் அடாவடித்தனங்கள் அதிகரிப்பினாலும் முஸ்லிம்கள் புலிகள் மீது இரக்கம் காட்ட ஆரம்பித்தனர். ஓரளவு ஆதரவும் தர ஆரம்பித்தனர். ஏறாவூர், மருதமுனை, சம்மாந்துறை, நிந்தவூர் மக்கள் புலிகளுக்கு புகலிடமும் உணவும் கொடுத்துதவினர். இதுபற்றி, தமிழ் தேசிய இராணுவத்தால் காரைதீவில் வைத்து முஸ்லிம்கள் இன ரீதியாகப்பிரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டபோது புலிகளினால் தினகரன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிக்கையில், முஸ்லிம்கள் புலிகளுக்கு ஒத்துழைத்ததற்கான ஈ.பி.ஆர்.எல்.எப். கோஷ்டியின் பழிவாங்கலே இது எனபுலிகளே கூறினர், கண்ணீர் விட்டனர்.

இந்திய இராணுவ விலகலைத் தொடர்ந்து புலிகள் வடகிழக்கில் அதிகாரம் செலுத்த ஆரம்பித்தனர். புலிகள் ஏனைய தமிழ் இயக்கங்களுக்கு மாற்றமாக முஸ்லிம்களுடன் புரிந்துணர்வோடு, நன்றியுடன் நடந்து கொள்வர் என முஸ்லிம் சமூகம் பெரிதும் நம்பியது. முன்னர் புலிகள் உட்பட அனைத்து தமிழ் இயக்கங்களும் தமக்குச் செய்த அநீதியையும் மறந்து முஸ்லிம்கள் புலிகளுக்கு வரவேற்பு அளித்தனர். காத்தான்குடி, கல்முனை, வாழைச்சேனை போன்ற ஊர்களில் புலிகள் வரவேற்கப்பட்டனர்.

இவ் வரவேற்பை புலிகள் தவறாக விளங்கிக் கொண்டனர்.அதாவது முஸ்லிம்கள் தமக்கு அடிமையாகி விட்டார்கள் என நினைத்தனர்.

புலிகள் தமது கர்வத்தைக் காட்டத் தொடங்கினர். ஆயுத முனையில் பல முதலாளிமார்களிடமிருந்தும் , ஹாஜிமார்களிடமிருந்தும் பணம் பறிக்கப்பட்டதும் ஊரின் சில பெரியவர்கள் ''சின்னப்புலிகளின் செருப்படிக்கு ஆளானார்கள்'' புலிகளின் ''சென்றி'' களில் பல ஆலிம்களும் கேவலப்படுத்தப்பட்டனர். பெண்கள் கேலி செய்யப்பட்டனர். பல முஸ்லிம் வாலிபர்கள் பிடித்துச் செல்லப்பட்டனர். அவர்கள் பற்றிய தகவல்கள் இன்று வரை இல்லை.

புலிகள் மீது தாம் வைத்திருந்த நம்பிக்கைக்கு முரணாக புலிகள் துரோகம் செய்வதை முஸ்லிம்கள் காணத் தொடங்கினர். இந்தப் புலிகள் அழிந்துபோக மாட்டார்களா என ஒவ்வொரு முஸ்லிம் மகனும் பிரார்த்திக்குமளவு புலிகளின் அடாவடித்தனங்கள் அதிகரித்தன.

இந்நிலையில் தான் இலங்கை இராணுவத்துக்கும் - புலிகளுக்கும் மோதல் ஏற்பட்டது. இந்த யுத்தத்தின் போது முஸ்லிம்கள் - அடிமைகள்- தமக்கு உதவுவார்கள் என புலிகள் நம்பினர். புலிகளின் அத்தனை அக்கிரமங்களையும் அனுபவித்த முஸ்லிம் சமூகம் எவ்வாறு புலிகளுக்கு உதவும் ? தன் மானமில்லாத-கேவலமான சமூகம் தான் அப்படிச் செய்யும். முஸ்லிம்கள் இலங்கை இராணுவத்தை தம்மைக் காக்க வந்த காவலர்களாகக் கருதினார்கள். வரவேற்றார்கள். ஒத்துழைப்புத் தந்தார்கள். இதன் காரணமாகத் தான் புலிகள் முஸ்லிம்களை துரோகிகள் எனச் சாடுகின்றனர்.

உண்மையில், புலிகளும் ஏனைய தமிழ் குழுக்களும் தான் துரோகிகளே தவிர முஸ்லிம்கள் அல்லர். முஸ்லிம்கள் இன்னமும் கூட நிதானத்தை இழக்கவில்லை. ஒரு முஸ்லிம், இராணுவ உதவியின்றி கல்முனையிலிருந்து 6 மைல் தொலைவிலுள்ள களுவாஞ்சிக்குடிக்கு சென்று வர முடியாது.ஆனால் ஒரு தமிழர் இராணுவ பாதுகாப்பு இன்றி மட்டக்களப்பிலிருந்து 70 மைல் தொலைவில் உள்ள பொத்துவில் வரை சென்று வர முடியும். முஸ்லிம்களை இந்நிலைக்குத் தள்ளிவிட்ட புலிகள் முஸ்லிம்களைத் துரோகிகள் எனக் கூறுவது நகைப்புக்குரியதாகும்.

ஆகவே, இந்த இருஇனங்களும் ஒற்றுமைப்பட வேண்டுமாயின் முஸ்லிம்கள் எதிர்பார்ப்பதைவிட அதிகமாக தமிழர்கள் விட்டுக் கொடுக்க வேண்டி வரும் இல்லாவிடில் தமிழர்களும் முஸ்லிம்களும் மோதிக் கொண்டு இருவருமே அழிவதைத் தவிர வேறு இல்லை.

முபாறக் அப்துல் மஜீத்

கல்முனை




## தமிழ் முஸ்லிம் ...

மத்தியிலும் பெரும் கிலியை ஏற்படுத்திற்று.

அண்மைக்காலச் சம்பவங்களில் குறிப்பாக காத்தான்குடி பள்ளிவாசல் கொலை, ஏறாவூர் படுகொலை ஆகியவற்றின் பின்னரே அப்பாவித்தமிழ் மக்களுக்கெதிரான தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. ஏறாவூரில் முஸ்லிம்கள் படுகொலைசெய்யப்பட்டதும் அதற்கு 'பதிலடி'யாகவே வீரமுனைக் கிராமத்தில் அகதிகள் முகாமில் தமிழர்கள் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் படுகொலை செய்யப்பட்டார்கள். இவ்வாறான படுகொலைச் சம்பவங்களை முழு முஸ்லிம் சமூகமும் எதிர்த்தால் கூட அப்பாவி முஸ்லிம்கள் பள்ளிவாசல்களிலும், பாதை ஓரங்களிலும், பஸ்தரிப்புகளிலும், ரயில் பயணங்கள் செய்யும் பொழுது கொலை செய்யப்படுவதை தடுக்கும் வழி யாது? என ஆக்ரோசமாக கேட்கும் போர்க்குணம் படைத்த முஸ்லிம் இளைஞர்களும் முஸ்லிம் சமூகத்தில் உண்டு. தத்துவார்த்த ரீதியாகக் கூறின், நியூட்டன் கூறியதுபோல ஒவ்வொரு தாக்கத்திற்கும் மறுதாக்கம் உள்ளது போல அப்பாவி முஸ்லிம்கள் குண்டு வெடிப்புகளிலும் பஸ்-ரயில் பிரயாணங்களிலும் கொல்லப்பட அதற்கு பதிலடியாக அப்பாவி தமிழ் மக்கள் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் இராணுவத்தின் ஒத்துழைப்புடன் கொலை செய்யப்படுகின்றனர். மீண்டும் பதிலடிக்கு பதிலடியாகவே குண்டு வெடிப்புகள் நிகழ்ந்து முஸ்லிம்கள் கொல்லப்படுகின்றனர். சுருங்கக் கூறின் ஒரு கொலை பத்து கொலைகளுக்கு காரணமாகி பத்து கொலைகள் நூறு கொலைகளுக்கு காரணமாகின்றன.

முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதபாணியாவதற்கு காரணமானவர்கள் தமிழ் இராணுவ அமைப்புக்களைச் சேர்ந்தோரும் - இனவாதத்தை கிளறி அரசியல் லாபம் சம்பாதிக்கும் முஸ்லிம் அரசியல் வாதிகளுமாவர். அதேபோல முஸ்லிம்களுக்கிடையே ஒரு பலமான முழுக்க முழுக்க தமிழ் எதிர்ப்பைக் கொண்ட ராணுவ ரீதியான ஒரு ஜிஹாத் அமைப்போ அல்லது முஹாஜிதின் குழுவோ உருவாவதற்கு காரணமாக அமையப்போவோரும் தமிழ் இராணுவக் குழுவினரும், இனவாத-முஸ்லிம் அரசியல் வாதிகளுமாவார். எவ்வாறு சிங்கள எதேச்சாதிகாரத்தினால் பாதிக்கப்பட்டு தமது தந்தை, தாய்மார்கள், சகோதரர்களை இழந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களின் துணையை நாடி இராணுவக் குழுக்களை அமைத்தார்களோ அதேபோன்று குண்டு வெடிப்புகளிலும், பஸ்-ரயில் பிரயாணங்களிலும் தமது தந்தை, தாய், மக்களை, சகோதரர்களை இழந்த முஸ்லிம் இளைஞர்கள் பழிக்குப் பழி வாங்கும் எண்ணத்துடன் சர்வதேச ஜிஹாத் அமைப்புகளுடன் உறவுகளை ஏற்படுத்தி ஒரு பலமான முஸ்லிம் இராணுவ அமைப்பை அல்லது அமைப்புக்களை ஏற்படுத்தி பாரம்பரிய தமிழ்-முஸ்லிம் உறவையும் அமைதியையும் விரும்பும் அப்பாவி தமிழர்களையும், அப்பாவி முஸ்லிம்களையும் கொல்ல மாட்டார்கள் கொள்ளையடிக்க மாட்டார்கள் என்பதற்கு எவ்விதமான போலிச் சாட்டுகளையும் கூறிவிடமுடியாது. சிங்கள பேரினவாதத்தின் தொடர்ந்தேர்ச்சியான அநீதிகளும் அக்கிரமங்களும் எவ்வாறு ஒரு பிரபாகரனை உருவாக்கியதோ அதேபோல தமிழ் பேரினவாதத்தின் தொடர்ந்தேச்சியான படுகொலைகள் ஒரு முஸ்லிம் பிரபாகரனை உருவாக்காது என்பதற்கான காரணங்களை நூற்றுக்கு நூறு வீதம் மறுதலிக்க முடியாது. அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் இரண்டுக்குமே நாசம் ஏற்பட்டு சிங்களப் பேரினவாதம் முழு இலங்கையிலும் காலூன்ற வழிவகுக்கும்.

**4. தமிழ் முஸ்லிம் ஒற்றுமை மிகக் கணிசமானளவு பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையை மீண்டும் கட்டியெழுப்பி ஒரு பலமான தமிழ் பேசும் சமுதாயத்தினை உருவாக்குவதற்கான காரணிகளை சிறிது விளக்கு வீர்களா?**

தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை வட-கிழக்கில் மாத்திரமல்ல ஏனைய பகுதிகளிலும் ஏற்படுத்தப்படுவது யதார்த்தமாகும். தற்போதைக்கு ஆகக்குறைந்த பட்சம் வட-கிழக்கிலாவது தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுத்தப்படுவது கண்டிப்பான ஒரு விடயமாகும். தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையைச் சிதைத்துவிட்டு எந்த ஒரு இயக்கமும் தமிழ் மக்களுக்கான பரிபூரண சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்து விட முடியாது. தமிழ் முஸ்லிம் இரு சமூகங்களும் பேரினவாதத்திடமிருந்து விடுதலை பெற தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை அவசியமாகும்.

குண்டு வெடிப்புகளும், ரயில்-பஸ் கொலைச் சம்பவங்களும் முஸ்லிம் மக்களை ஆத்திரமூட்டச் செய்து அப்பாவித் தமிழர்களை முஸ்லிம் ஊர்காவல் படையினருக்கு பலியாக்கி அப்பாவித் தமிழ் சமுதாயத்தைப் பாதுகாக்கும் ஓர் அமைப்பு விடுதலைப்புலிகள் மாத்திரமே என்ற அபிப்பிராயத்தை

→ பார்க்க பக்கம் 12

# காரணமின்றி தலையசைத்தால் காதில் துப்பாக்கி

இன்று யாழ்ப்பாணத்து மக்கள் படும் அவலங்களை நல்ல முறையிலும், நாசூக்காகவும், வெளியிடுவதை அறிந்து சந்தோஷப்படுகிறேன். மக்கள் தங்கள் வாழ்க்கை எனும் வண்டியை ஓட்டுவதற்கு படும் சிரமங்களை எழுத்தில் எழுதி விளங்க வைக்க முடியவில்லை. எத்தனையோ இதயங்கள் சொல்லொணாத் துன்பத்தில் துடிக்கிறார்கள். இருந்தும் அவர்கள் தங்கள் புத்தியினாலும், சாதுரியத்தினாலும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வாழ்கின்றார்கள். இன்றைய சூழலில் வெருட்டி பணம் வசூலித்து தங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் புலிகள் நெஞ்சை நிமிர்த்தி வாழ்கின்றார்கள். இதே வேளை மக்களை சுரண்டுவதாலும் அவர்களை கட்டுப்பாடு போட்டு வழிநடத்துவதாலும் கூட பணம் வசூல் செய்கின்றார்கள். இதுமட்டுமல்ல தென்பகுதி நோக்கி வருவதற்கு பலவிதமான கட்டுப்பாடுகள் போட்டும் தங்களுக்கு தெரிந்தவர்களுக்கும், தங்களுக்கு சார்பாக நடப்பவர்களுக்கும், மாவீரர் குடும்பங்களுக்கும் விஷேட அனுமதி கொடுத்தும் அனுப்பி வைக்கின்றார்கள்.

அவர்கள் நினைக்கிறார்கள் மக்கள் எல்லாம் தங்கள் வசம் என்றும், மக்கள் தங்கள் பக்கம் ஆதரவென்றும், ஆனால் மக்கள் நிலைமை மிக பரிதாபத்துக்குரியது. யாழ்ப்பாணத்தில் காரணமின்றி தலையசைத்தாலே காதில் துப்பாக்கியை வைத்து விடுவார்கள். மக்கள் எத்துன்பம் கஷ்டம் இருந்தாலும் தாலியை விற்றாவது அவர்கள் கேட்கும் தொகை பணத்தை கொடுக்கிறார்கள். மக்கள் துன்பங்களை எப்படி எடுத்துச் சொல்ல. இதை அறிந்தாலே என் உயிருக்கே ஆபத்து வரலாம்.

நீங்கள் சில வேளைகளில் நினைப்பீர்கள் மக்களெல்லோரும் சந்தோஷமாக வாழ்கின்றார்களென்று. அவர்கள் தங்கள் கஷ்டங்களை எடுத்துச் சொல்ல முடியாத பட்சத்தில் மௌனமாகவே வாழ்கின்றார்கள். முடியுமானால் யாழ்ப்பாணத்தில் வாழும் ஒரு சிலரை சந்தித்து பேட்டி கண்டீர்களானால் வாயிலே கைவைத்து ஆச்சரியப்படுவீர்கள்.

ஐயா எனது மனம் படும் வேதனையை எப்படியாவது எல்லோரும் அறிய செய்ய வேண்டும் என்ற உந்தலினால் இதை எழுதி உங்களிடம் ஒப்படைக்கிறேன். புலிகளுக்கு எதிராக இப்படி எழுதியது தெரிந்தால் எங்கள் உயிருக்கு உலைவைத்து விடுவார்கள். தயவு செய்து இதை யாருக்கும் தெரியப்படுத்த வேண்டாம் என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். மக்களுக்காகவும் அவர்கள் துன்பத்தை எல்லா வித மக்களும் அறிய வேண்டும் என்ற நோக்கோடும் தான் இந்த நல்ல காரியத்தை செய்யத் துணிந்தேன்.

துப்பாக்கிக்கு பயந்து கீறிய கோட்டை தாண்டி வாழாமல் அடக்கு முறையில் வாழும் மக்களுக்கு விடிவு கிடைக்காதா? என்ற மன வேதனையோடு இதை முடிக்கிறேன். மக்கள், மக்கள் என்று வெளி வேஷம் போட்டு மக்களை வதைத்து சித்திரவதை செய்து அணு அணுவாக கொல்வதிலும் பார்க்க ஒரு குண்டு போட்டு எல்லோரையும் அழித்து விட்டால் சந்தோசமாக இருக்கும். மக்களின் துன்பத்துக்கு எல்லையே இல்லையா? எத்தனை விதமான கட்டுக் கோப்புக்கள். வறுமை, துன்பம், ஐயா. இவற்றை உலகமக்கள் அறியட்டும் எடுத்துக் கூறுங்கள்.

பாரதி

யாழ்ப்பாணம்

நன்றி - நூலகத்திட்டம்



## நுவரெலியாவில்....

கனவானும் அவரது வாலும் அம்மையாரைப் பற்றி பேச வேண்டாம். பத்திரிகையை விற்க வந்தால் விற்றுவிட்டுப் போய்விட வேண்டும் என்று மிரட்டினார்கள்.

நண்பர்கள் ஜோவும், சமனும், பாலாவும் 'பலாத்காரமாக பத்திரிகைகள் பறிக்கப்பட்டதை மக்களிடம் சொல்லவே வந்திருக்கிறோம். எங்களிடம் ஆயுதங்களில்லை. நாம் கலகம் விளைவிக்க வரவுமில்லை. எம்மிடம் உள்ள ஒரேயொரு ஆயுதம் பேனாவும் பேப்பரும் மட்டும்தான்' எனப் பதிலளித்தனர். தாம் ஒன்றும் செய்ய முடியாதென உணர்ந்த கனவாவனும் வாலும் நழுவி விட்டனர்.

பத்திரிகைகள் எல்லாம் விற்றுத் தீர்ந்தாகிவிட்டது. புறப்படத் தயாரான போது வீதியின் மறுபக்கமாக பத்திரிகை விற்கச் சென்ற இரண்டு நண்பர்களைக் காணாததால் அவர்கள் வரும்வரை சிறிது காத்திருக்க வேண்டியதாயிற்று.

இந்நேரம் எங்கிருந்தோ திடீரென வந்த குண்டர் கூட்டம் 'பத்திரிகைச் சுதந்திரம் வேண்டுமா? எனக் கேட்டவாறே தாக்க ஆரம்பித்தது. எங்கிருந்தோ வந்த கற்கள் தலையைப் பதம்பார்த்தன. இந்த கலவரத்துள் சரிநிகர் சிவகுமார் தாக்கப்பட்டு அவரது கமரா பிளாஷ் பறிக்கப்பட்டது.

எல்லாம் ஒரு சில நிமிடங்களுள் நடந்து முடிந்திருந்தன.

அம்மையாரின் அதிகாரக் கை ஒவ்வொரு பத்திரிகையாளனின் குரல் வளையையும் நசுக்குமளவிற்கு நீண்டிருந்தது.

தமிழ் சினிமாக்களில், எல்லாம் முடிந்த பிறகாவது நீதியை நிலைநாட்ட வந்து குதிக்கும் காக்கிச் சட்டை அன்றைக்கு வரவேயில்லை. பொலிஸிற்குப் போய்த்தான் புகார் கொடுக்க வேண்டியதாயிற்று.

ஆக, இன்றைக்கு அரசின் ஜனநாயகம் சமன் பத்திரிகையாளர் மீதான தாக்குதல், பத்திரிகைகள் மீதான ஒடுக்கு முறை, கருத்துச் சுதந்திரத்தையும் பத்திரிகைச் சுதந்திரத்தையும் நசுக்குதல் என்றாயிற்றோ?.

## தெரிவுக்குழு.......

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரான சிவசிதம்பரம் அவர்கள் "இம்மாதம் 7ம் திகதி இத் தீர்வுத் திட்டம் தொடர்பாக எமக்குத் தெரிவித்தார்கள். நாம் அதன் முழு அம்சத்தையும் எமக்குத் தாருங்கள் பரிசீலித்து பதில் அளிக்கிறோம் என்றோம் பின்னர் 14ம் திகதி சந்திப்பின் போது இது தொடர்பான வரைவுகள் எமக்குத் தரப்பட்டன. இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால் 7ம் திகதி சந்திப்பின் போது கூறப்பட்டவற்றிற்கும் 14ம் திகதி தரப்பட்ட யோசனைகளுக்குமிடையே முன்னுக்குப் பின் முரணாக நிறைய வேறுபாடுகள் காணப்பட்டன. குறிப்பாக முதலில் பேசும்போது இரண்டு மாகாண சபைகள், இரண்டு மாகாண சபைகளுக்குமான ஒரு பிராந்திய சபை, ஒரு முதலமைச்சர் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் 14ம் திகதி வந்த தீர்வு யோசனைகளில் இரண்டு மாகாண சபைகள் இரண்டு முதலமைச்சர்கள் எனவும் நிர்வாக அதிகாரங்கள் மாகாண சபைகளிடமே இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் சொன்னதொன்று செய்வதொன்றாக உள்ளது. இது தவிர நான்கு அம்சத் திட்டத்திற்கும் இதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. வடக்கு, கிழக்கு இணைப்பு உட்பட அதில் குறிப்பிடப்பட்ட பல முக்கியமான விடயங்கள் அதில் 'இல்லை' என தெரிவித்தார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்கள் 'இத்திட்டம் நான்கு அம்சத்திட்டத்திற்கு எவ்வளவோ அப்பாற்பட்டது. நான்கு அம்சத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு இணைப்பை பிரதானமாக வலியுறுத்தி உள்ளோம். இந்த யோசனை வட, கிழக்கு இணைப்பை அடிப்படையில் சிதைப்பதை நோக்கமாக கொண்டது. இவ்வளவு காலமும் போராடி இரத்தமும் சிந்தி இதனைத்தான் பெறுவதென்றால் தமிழ் மக்களுக்கும் எமது மனச்சாட்சிக்கும் துரோகம் இழைத்தவர்கள் ஆவோம். இது தவிர முஸ்லிம் காங்கிரஸ் உடன் இதுவரை நடத்திய பேச்சுவார்த்தைகள் கூட அர்த்தமற்றதாகிவிடும். ஏனெனில் வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பாகவே முஸ்லிம் காங்கிரஸுடன் நிறைய நாட்களை செலவிட்டிருக்கிறோம். ஆகவே தமிழ் காங்கிரஸ் ஒரு போதும் இத்திட்டத்தை ஏற்காது" என்றார்.

ஈரோஸ் பிரமுகர் சுதா மாஸ்ரர் "இத் தீர்வு யோசனைகளை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட நான்கு அம்சத் திட்டம் தான் தமிழ் மக்களின் ஆகக் குறைந்தளவிலான அபிலாசைகளைப் பூர்த்தியாக்கிற திட்டம். எனவே இதற்கு நாம் ஒரு போதும் ஆதரவளிக்கவியலாது. வட-கிழக்கு இணைப்பைத் துண்டிக்க தமிழ் கட்சிகளுடைய ஆதரவை யாரும் எதிர்பார்க்க முடியாது. இத்தீர்வினை ஏற்றால் நாம் தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்ததாகவே இருக்கும். பாராளுமன்ற தெரிவுக்குழு ஊடாக ஒரு நியாயமான தீர்வு வருமென்றால் பரவாயில்லை. ஆனால் இப்போது பாராளுமன்ற தெரிவுக்குழு பயனற்றுப் போய்விட்டதா என்ற கேள்வியை ஏற்படுத்துகின்றது. ஒரு நியாயமான தீர்வை முன்வைக்காமல் இழுத்தடிக்கும் முயற்சியில் அது காலத்தை விரயமாக்கிக் கொண்டிருப்பதால் அதன் மீதான அதிருப்தி இப்போது வெளிப்படையாகிவிட்ட்து" என்றார்.

## முஸ்லிம் இனப்...

இரண்டு ஜீப் வண்டிகளிலும் வந்த பொலிஸாரை புலிகள் இடைமறித்துத் தாக்கியதில் பதினொரு பொலிஸாரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

நண்பகல் பன்னிரண்டு மணிக்கு படையினர் வருவதற்குள் கொல்லப்பட்டவர்களின் தொகை நூற்றறுபதைத் தாண்டியது. நூற்றுக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். வீடுகள் எரியூட்டப்பட்டன.

ஒரு அதிகாலையும், பகற்பொழுதும் கொடுந்துயருடன் அதிர்ச்சியிலுறைந்தது.

முஸ்லிம் மக்கள் மீதான இவ்வாறான தாக்குதல்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைப் பீடித்த நோய் போல எண்பதுகளின் நடுக்கூறுகளிலிருந்து தொடர்ந்து வருகிறது. ஈரோஸினால் மேற்கொள்ளப்பட்டதெனக் கூறப்பட்ட மன்னார்ப் பள்ளிவாசல் படுகொலையில் ஆரம்பித்த முஸ்லிம்கள் மீதான இந்த இனப்படுகொலை, அதே காலப்பகுதியில் பல்வேறு காரணங்களுக்காக மூதூர் உட்பட வெவ்வேறு பிரதேசங்களில் பல்வேறு இயக்கங்களால் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், எனத் தொடர்ந்தது.

87 டிசெம்பர் 30 இல் காத்தான்குடியிலும், அயற்கிராமங்களிலும் 28 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். 88 மார்ச்சில் கல்முனையில் 25 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். 88 நவம்பர் 17 இல் ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப்., டெலோ இயக்கங்களின் இராணுவக் கூட்டான தமிழ் தேசிய இராணுவத்தால் 40 முஸ்லிம் பொலிஸார் தனியே பிரித்தெடுத்துப் படுகொலை செய்யப்பட்டனர். 89 ஜூனில் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் அங்காடி வியாபாரிகளின் எழுபதிற்குமேலான கடைகள் எரிக்கப்பட்டன. 89இல் மேற்படி இயக்கங்கள் சம்மாந்துறை மற்றும் முஸ்லிம் கிராமங்களில் கடத்தல், கொள்ளை, கொலை போன்ற நடவடிக்கைகளில் முஸ்லிம் வெறுப்பிலே கட்டியெழுப்பப்பட்ட இந்திய இராணுவத்தின் ஒத்தாசையுடன் தாராளமாக ஈடுபட்டன.

90 இல் புலிகளுக்கும் அரசுக்குமான யுத்தம் ஆரம்பமான பிற்பாடு ஒகஸ்ட் மூன்றாம் திகதி காத்தான்குடியிலும் பின்னர் ஏறாவூரிலுமாக இரண்டு பள்ளிவாசல்களிலும் முறையே 146, 173 முஸ்லிகள் படுகொலை செய்யப்பட்டனர். 90 ஒக்டோபர் இறுதி வாரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்தும், மன்னாரிலிருந்தும் புலிகளால் முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். 92 ஏப்ரல் 26 இல் அழிஞ்சிப்பொத்தானையில் 50 க்கு மேற்பட்டவர்கள் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டனர். இப்போது இந்த நான்கு கிராமங்கள்.

கடந்த ஒரு தசாப்தத்துள் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மாதிரிக்குச் சிலவே இவை.

இவ்வாறான முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை மேற்கொள்பவர்கள் தமது தனித்துவத்தையும் அடையாளத்தையும் பேண பேரினவாத அரசிற்கெதிராகப் போராட முனையும் அதே வேளை முஸ்லிம்களின் தனித்துவத்தையும் இன அடையாளத்தையும் அங்கீகரிக்க மறுப்பது விசித்திரமானது.

கூடவே முஸ்லிம் ம்க்களை விரட்டியடிப்பதும், ஒழித்துக் கட்டுவதும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கான வழிமுறைகளில் ஒன்று என யாராவது கருதுவார்களானால் அது முட்டாள்தனமானதும், சாத்தியமற்றதும் என்பதுடன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையையே வலுவிழக்கச் செய்துவிடும். மற்றவர்களுடைய சுதந்திரத்தை அங்கீகரிப்பதில் தான் தமிழ் மக்களுடைய சுதந்திரத்திற்கு ஒரு அர்த்தப்பாடு இருக்க முடியும்.

எனவே முஸ்லிம்கள் என்பதற்காக மேற்கொள்ளப்படும் எல்லாவகையான ஒடுக்குமுறையையும் படுகொலையையும் உடனடியாக நிறுத்துவதும், நிறுத்தக் கோருவதும் நிறுத்தாவிடில் ஆக்ரோஷமாகக் குரல் எழுப்புவதும்

முஸ்லிம்களை இஸ்லாமியத் தமிழர் என்றோ; தமிழ் முஸ்லிம்கள் என்றோ ஈழவர் என்றோ வகைப்படுத்தாமல் இஸ்லாத்தைப் பிரதானமாகவும், தமிழ் மொழியைத் துணையாகவும் இனத்துவ அடையாளமாகக் கொண்ட தனித்துவமான இனக்குழு என இனம்காண்பதும், அதனை அங்கீகரிப்பதும் தமிழ் மக்களுக்கிருப்பதைப் போன்ற எல்லா வகையான சுதந்திரங்களையும், உரிமைகளையும், தனித்தவத்தையும் ஏற்றுக் கொள்வதிலும்,

பாரம்பரியமான தமது இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் தமது பிரதேசங்களில் மீளக்குடியமர வழியேற்படுத்த குரல் கொடுப்பதும் மட்டுமே தமிழ் மக்களினதும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கான நியாயப்பாட்டைக் கொண்டு வருவதோடு, முஸ்லிம்களது நம்பிக்கையையும் ஒருமைப்பாட்டையும் பெறமுடியும். இல்லையேல் தமிழ் இனவாதம் தமிழ் மக்களை மீள முடியாப் பெருஞ் சூழலில் அமிழ்த்திவிடும்.

## வட கிழக்கு...

முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாடுகள் அல்ல, மாறாக இலங்கையின் அனைத்து சிறுபான்மை இனங்களுக்கும் எதிராகச் செயற்படும் பௌத்த-சிங்கள பேரினவாதத்துடன் சமரசம் செய்து கொண்டு, தமது எதிர்காலத்தை உத்தரவாதப் படுத்திவிடலாம் எனக் கருதும் தெற்கு முஸ்லிம் தலைமையின் அரசியல் நிலைப்பாடுகளே. சிறுபான்மை இனங்களின் தனித்துவத்தையும், உரிமைகளையும் அங்கீகரிக்க மறுக்கும் சிங்கள பேரினவாதப் போக்குகளுடன் சமரசம் செய்வதன் மூலம் எந்தப் பயனையும் தாம் பெற்றுக் கொள்ள முடியாது என்ற முடிவுக்கு வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் வந்துள்ளனர், அவர்களது தேசிய இயக்கம் உருப்பெறுவதற்கு பேரின வாதம் பற்றிய இந்த முடிவும் ஒரு காரணியாக அமைந்திருக்கிறது. இதுவரையிலான இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாறு, இனவாத அரசுடனான சமரசத்தின் மூலம், தன்னை அழித்துக் கொண்டிருக்கும் வரலாறாகவே அமைந்திருக்கின்றது இந்நிலையில் தொடர்ந்தும் சமரசம் செய்வது என்பது, தெற்கு முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் போவதில்லை. மாறாக முழு முஸ்லிம்களையும் மேலும் அழிவுக்குள்ளாக்கவே வழிவகுக்கும்.

தெற்கு முஸ்லிம்கள் ஒரு விடயத்தை நினைவில் வைத்திருக்க வேண்டும். இதுவரைக்கும் அரசியல் ரீதியில், சிங்கள மக்களுடன் எவ்விதத்திலும் முரண்படாமல் செயற்பட்டும் கூட, 1915ல் இருந்து, அண்மைய பேருவளை நிகழ்வுகள் வரை எத்தனை இனவன்முறைகளை தெற்கு முஸ்லிம் சமூகம் அனுபவித்து விட்டது. அவர்க்ள் இழந்திருக்கும் உரிமைகள் எத்தனை. எனவே யதார்த்த உண்மைகளைப் பார்க்க மறுத்து (அல்லது பார்ப்பதற்கு அச்சப்பட்டு) போலி நியாயப்படுத்தல்களுடன் இனியும் தெற்கு முஸ்லிம்கள் வாழ்ந்துவிட முடியாது. அவ்வாறு வாழ்ந்து விட முயல்வது அவமானமிக்க ஒரு சமூகத் தற்கொலையாகவே இறுதியில் அமையும். தெற்கு முஸ்லிம்கள் மீதான சிங்கள பேரினவாத வன்முறைகளின் போதெல்லாம் மௌனம் சாதித்து, அல்லது அவற்றை நியாயப்படுத்திக் கொண்டு, தமது அரசியல், பொருளாதார நிலைகளைப் பாதுகாத்துக் கொள்கின்ற மரபுவழி தெற்கு முஸ்லிம் தலைமையின் பிடியிலிருந்து விடுபட்டு, இனியாவது தமக்குரிய அரசியல் பாதையைத் தெற்கு முஸ்லிம்கள் கண்டு கொள்ளட்டும்.

ஒரு தனித்துவமான தேசிய இனம் என்ற அங்கீகாரத்தின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள், தமக்குப் பொருத்தமான அரசியல் தீர்வைக் கோரவும், அதைப் பெற்றுக் கொள்ளவும் உரிமை பெற்றவர்களாக இருக்கின்றனர். எனினும் தமக்குரிய பொருத்தமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உறுதியான, நேர்மையான அரசியல் தலைமையொன்றின் தேவையை அவர்கள் கொண்டிருக்கின்றார்கள். இந்த தேவை வடக்கு-கிழக்கு முஸ்லிம்களை இன்று பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் அமைப்புக்கள் தம்மை மாற்றியமைப்பதினூடாகப் பூர்த்தி செய்யப்படுமா அல்லது புதிய தலைமையொன்றின் தோற்றம் அவசியப்படுமா என்பதை வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் தொடரும் தேசிய இயக்கம் தீர்மானிக்கும்.

இறுதியாக, வடக்கு-கிழக்கு முஸ்லிம்களிடையே உருப்பெற்றுக் கொண்டிருக்கும் தேசிய இயக்கத்தை அங்கு வாழ்கின்ற, தமிழ் மக்கள் தெளிவாக அடையாளம் காண வேண்டும். வடக்கு-கிழக்கு முஸ்லிம்கள் சிங்கள பேரினவாதத்தின் திட்டமிட்ட இனச் சிதைப்பு நடவடிக்கைகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தும் கூட, இன்றைய அவர்களின் தேசிய இயக்கமானது முதன்மையாக சிங்கள இனவாதத்திற்கு எதிராக உருப்பெறவில்லை; மாறாக தமிழ் இனவாதத்திற்கு எதிராக, விடுதலை அமைப்புக்களின் அராஜகத்திற்கு எதிராகவே முதன்மையாக உருப்பெற்றிருக்கிறது. அந்த உண்மையை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசிய இயக்கத்தில் தமிழ் இனவாதம் தோன்றியிருப்பதையும், விதிவிலக்கின்றி ஒவ்வொரு விடுதலை அமைப்பும் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மீது அராஜகத்தைப் பிரயோகித்திருக்கிறது என்பதையும் தமிழ் தரப்பினர் நேர்மையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இதன் மூலம்தான், வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இயக்கத்தில் கூர்மை பெற்றிருக்கும் தமிழர் விரோத உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியும். சிங்கௗப் பேரினவாதத்தின் திட்டமிட்ட இனச் சிதைப்புக்கும், அழிவுக்கும் உள்ளாகியிருக்கும் வடக்கு-கிழக்கு தமிழ், முஸ்லிம் சமூகங்கள் தமக்கிடையே கொண்டிருக்கும் முரண்பாடுகள், தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் அவர்களின் முயற்சிக்கு பெரும் தடையாக அமைகின்றன. இத்தகைய முரண்பாடுகள் தொடருமாயின், வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் தேசிய இயக்கம், முஸ்லிம் மற்றும் சிங்களப் பிற்போக்கு சக்திகளின் பிடிக்குள் அகப்பட்டு விடுவது தவிர்க்க முடியாததாகிவிடும். இதனால் தமிழ் மக்கள் தமக்குரிய தீர்வுகளைப் பெறுவது மேலும் சிக்கலாகி விடும்.

இந்நிலையில், தமிழ்த் தரப்பினர் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களைத் தனித் தேசிய இனமாக அங்கீகரித்து அவர்களைச் சமத்துவமாகக் கருதுவது அவசியமாகின்றது. வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்கள் முன்வைக்கும் எந்தவொரு அரசியல் கோரிக்கையையும், தமிழர் அமைப்புக்கள் சமத்துவ அடிப்படையில் அணுகி, பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கமான முடிவுக்கு வருவதுதான் தமிழ்-முஸ்லிம் முரண்பாட்டை அகற்றுவதற்குத் தமிழர் தரப்பு முன்னெடுக்கக் கூடிய சரியான மார்க்கம். இதன் மூலம்தான், வடக்கு-கிழக்கிலுள்ள தமிழ், மக்களும், முஸ்லிம்களும் தமது தனித்துவத்தையும், உரிமைகளையும் உறுதியாக நிலைநிறுத்தக் கூடிய சூழ்நிலை உருவாகும்.

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

இல. 6 அலோசாலை கொழும்பு 3. தொலைபேசி : 574047

## நுவரெலியாவில்

## சரிநிகர், யுக்திய பத்திரிகையாளர் மீது தாக்குதல்

## கமெரா பிளாஷ் பறிப்பு

நுவரெலியா

1992 ஒக் 17

நேரம் காலை பத்தரை மணியிருக்கும்.

சரிநிகரின் சகோதரப் பத்திரிகையான 'யுக்திய' வின் ஆசிரிய குழுவைச் சேர்ந்த நண்பர்கள் ஜோ, சமன், சூலவன்ச, சரிநிகர் சிவகுமார், இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் செயலாளர் பாலா உட்பட பத்துப் பதினைந்து பேர் யுக்திய விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு கடைகடையாகவும், தெருக்களிலும், பஸ் நிலையத்திலுமாக கோஷமிட்டவாறு யுக்தியவை விற்றுக் கொண்டிருந்தனர்.

காக்கியுடை மோட்டார் சைக்கிள் சீறிப்பாய்ந்து வந்து விசாரித்தது. கிடைத்த பதிலில் திருப்தியோ என்னவோ அது திரும்பி விட்டது.

நுவரெலியாவின் உச்சிவெயில் உறை குளிருக்கு கதகதப்பூட்டியது.

கொண்டு வந்திருந்த எல்லாப் பத்திரிகைகளும் விற்றுத் தீரும் தருவாயிலிருந்தன.

நண்பர் சூலவன்ச பஸ்நிலையத்திலிருந்த ஒரு உயர்ந்த கல்லை மேடையாக்கி ஏறிநின்று பேசிக் கொண்டிருந்தார்.

நுவரெலியா நகரில் விற்பனைக்கென கடைகளில் போடப்பட்டிருந்த ஒக்டோபர் இரண்டாவது வார யுக்திய, ராவய பத்திரிகைகள் அனைத்தையும் நுவரெலிய நகரமேயர் நளின்திலக ஹேரத் அம்மையார் தனது வாகனத்தில் வந்து கடைகளிலிருந்து பலாத்காரமாக பறித்துச் சென்றது பற்றியும், இது பத்திரிகைகளுக்கும், பத்திரிகையாளர்களுக்குமான அச்சுறுத்தலாகும் என்றும், பத்திரிகைச் சுதந்திரத்தையும், எழுத்துச் சுதந்திரத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் வலியுறுத்தியும் பேசிக் கொண்டிருந்தார்.

திடீரென அங்கு தோன்றிய நாகரீகமாக உடையணிந்த ஒரு

→ பார்க்க பக்கம் 11



## தமிழ் முஸ்லிம் ...

உருவாக்கும் நோக்குடனேயே முஸ்லிம் பகுதிகளில் குண்டு வெடிப்புச் சம்பவங்களும் ஏனைய சம்பவங்களும் இடம்பெறுகின்றனவென இலங்கை வானொலியில் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இவ்வாறான ஒரு திட்டம் விடுதலைப் புலிகளிடம் இருப்பதாக நான் நம்பவில்லை. ஆனால், தொடர்ந்தேர்ச்சியான குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இவ்வாறான ஓர் அச்சத்தை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது என்னவோ உண்மை தான்.

அடுத்தது. - தமிழ் முஸ்லிம் உறவைப்பற்றி சிந்திப்பவர்கள் எமது இரு சமூகங்களிடையே அதிகம் அதிகமாக உருவாக வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் இரண்டும் ஒவ்வொரு விடயங்களிலும் உடன்பட்டு வாழ வேண்டிய அவசியமில்லை - ஆகக்குறைந்த பட்சம் இவ்விரு சமூகங்களும் 'ஓர் உடன்படிக்கையின் கீழாவது ஒன்றுபட்டு வாழ்வதவசியம். இவ்வாறான ஓர் உடன்படிக்கை இஸ்லாமிய வரலாற்றில் கூட நிகழ்ந்திருக்கிறது - இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அராபியரும் ஏற்றுக்கொள்ளாத அராபியரும் 'ஹுதைபியா' என்ற இடத்தில் உடன்படிக்கை செய்து கொண்டு பல வருடங்கள் சச்சரவின்றி சமாதானமாக வாழ்ந்தார்கள். எனவே இவ்வாறான ஓர் உடன்படிக்கை தமிழ்-முஸ்லிம் சமூகங்களிடையே இல்லாவிடின் வடகிழக்கில் 'வாழ்க்கை' என்பதே இருக்காது.

இது பற்றி முதலில் தமிழ்-முஸ்லிம் புத்திஜீவிகளிடையே ஓர் இணக்கம் வரவேண்டும். இரு சமூகத்தைச் சேர்ந்த புத்திஜீவிகள் ஒன்றுகூடி ஓர் திட்டத்தைத் தயாரித்து அதன்படி விடுதலைப்புலிகள் இயக்கம், ஏனைய இராணுவக் குழுக்கள், தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகள் அரச இராணுவ அதிகாரிகள், ஊர்காவல் படையினர் சாதாரண மக்களின் பிரதிநிதிகள், பள்ளிவாசல்-கோயில் தர்மகர்த்தாக்கள் போன்றோரை அணுகி மேற்படி உடன்படிக்கையை வெற்றிகரமாக அமுலாக்க பாடுபட வேண்டும். அதை விடுத்து தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி பேசுவது, எழுதுவது போன்றவற்றால் மட்டும் தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டுவிடாது.

அடுத்தது பலமான தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை உருவாக விரைவான தீர்வொன்று இனப்பிரச்சினைக்கு காணப்பட தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகளும், விடுதலைப் புலிகளும் ஒத்துழைக்க வேண்டும். இயக்கரீதியாக தம்மிடையே பிளவுபடாது, விடுதலைப் புலிகள் இயக்கமும், ஏனைய தமிழ்-அரசியல், இராணுவக் குழுக்களும் முஸ்லிம் அரசியல் கட்சிகள், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு இனப் பிரச்சினைக்கு இணக்கப்பாடொன்றை சிங்கள பேரினவாதக் கட்சிகளின் முன்வைக்கும்பொழுது அதை வென்றெடுக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இன்று அதிகம் உண்டு. அதை விடுத்து ஓர் இயக்கத்தை அழிக்க இன்னொரு இயக்கத்தை ஆரம்பிப்பதும் ஒருவரை அழிக்க இன்னொருவரை ஊக்குவிக்க பேரினவாதத்தை நாடுவதும் எதிர்காலத்தில் தமிழ்-முஸ்லிம் இரு சமூகங்களின் அழிவிற்கு வித்திட்டு சிங்களப் பேரினவாதம் முழு இலங்கையிலும் தமது கால்களை பலமாக ஊன்றிப்பதிக்க இடமளித்தால் போல் முடிந்துவிடும்.

## நுணலும் தன் வாயால் கெடும்

ஓகஸ்ட் 31ம் திகதி,

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மறைந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமரர் அமிர்தலிங்கம் ஞாபகார்த்தச் சொற்பொழிவை 'புரொன்ற் லைன்' சஞ்சிகையின் ஆசிரியர் ராம் அவர்கள் நிகழ்த்தினார். ஈழம் என்பது ஒரு வெறும் கனவு, ஈழக் கோரிக்கையத் தமிழர்கள் கைவிடாதவரை இப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு ஒன்றைக் காணவியலாது. இக்கோரிக்கை இருக்கும் வரை தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்க சிங்களவர்கள் தயங்குவார்கள் எனவும் ராம் அவர்கள் பிரசங்கம் பண்ணியுள்ளார்.

'77 இலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஈழக் கோரிக்கையை முன்வைத்தார்கள் என்பதும் அதற்கு முன்னரான தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளான ஐம்பதுக்கு ஐம்பது, பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் போன்றனவற்றிற்கு என்ன நடந்தது என்பதும் ராம் அவர்களுக்கு தெரியாமலிருக்க நியாயமில்லை.

1987 இலங்கை-இந்திய ஒப்பந்தத்துடன் ஈழக் கோரிக்கையையும் ஆயுதங்களையும் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பிய தமிழ் அமைப்புக்கள் இந்த நான்கு வருடங்களுள் தமிழர்களின் நாற்பதாண்டு அரசியல் வரலாற்றை ஒரு 'மினி' வரலாறாக்கி 'வரலாறு படைத்து' வெறுங்கையோடு எங்கு புகுவது என தெரியாமல் விழி பிதுங்கி நிற்கின்றன.

இவையெல்லாம் ஒரு புறமிருக்க ராம் அவர்களது உரை தொடர்பாக புலிகளின் பிரான்ஸ் பிரமுகர் திலகர் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்; ராம் அவர்களுக்கும் தமக்கும் இருந்த உறவு பற்றி. இந்த அறிக்கையினூடாக வெளிவந்திருக்கும் ஒரு முக்கியமான தகவல்; 'றோ'விடம் தாம் ஆயுதம் வாங்கியதை முதன் முறையாக புலிகள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

அவ்வறிக்கையின் சில பகுதிகள் கீழே:

"......திரு ராம் தன்னை, ஒரு விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளனாகவும் அதே சமயம் அவர்களது தனிநாட்டுக் கோரிக்கையின் ஆதரவாளனாகவும் காட்டிக் கொண்டார். நான் இவரது வீட்டிற்கு பல சந்தர்ப்பங்களில் சென்றுள்ளேன். பல சமயங்களில் நாங்கள், பிரபாகரன் உட்பட இவருடன் கலந்தாலோசனைகள் செய்துள்ளோம். இவர் பிரபாகரனை ஒரு புரட்சித் தலைவனாக புகழாரம் சூட்டினார். நானும், யோகியும் இவருடன் இவருடைய அலுவலகத்திலும், வீட்டிலும் மதிய, இரவு உணவு நேரங்களிலேயும் கலந்தாலோசனைகளை வைத்தோம். இவற்றின் போது நாம் எமது சுதந்திர தாயகத்தினை அடைவதின் தவிர்க்க முடியாத் தன்மையினை அழுத்திக் கூறினோம். ஒரு சமயத்தில் அதிசயிக்கத்தக்க விதத்தில், திரு. ராம், நாம் முழுத்தீவையுமே கைப்பற்ற வேண்டும் என்று கூறினார். தனது விஸ்தரிப்புக்கான வாதத்தின் போது எம்மிடம், இந்திய ம்க்களும் இலங்கையில் உள்ள தமிழரும் கலாசார ரீதியாகவும், பாரம்பரியமாகவும் மிக நெருங்கியவர்கள். எனவே இலங்கை அரசிற்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்றார். மீண்டும் ஒருமுறை எம்மிடம் முழுத்தீவையும் கைப்பற்றும் திட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்கு, இந்திய துருப்புக் களை அனுப்பும்படி இந்திய மத்திய அரசிடம் எம்.ஜி.ஆர். மூலமாக எம்மை வேண்டுகோள் விடுக்கும்படி கூறினார். இவ்விரு ஆலோசனைகளும் எம்மால் நிராகரிக்கப்பட்டன. இவற்றில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புத் திட்டத்தினை நாம் நிராகரித்த போதும், இந்தியா மறுபுறத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மூலமாக இக் குறிக்கோளை நிறைவேற்றியது.

## ஈழம் ஒரு கனவு–ராம்




## இந்தியா றோ ஊடாக ஆயுதம் வழங்கியது–புலிகள்

..........இத்தகைய் இந்துவுடனான சந்தோஷமான நாட்களில், 1986 செப்டம்பர் மாத முதல் வாரமளவில், திரு ராம் எமது அலுவலகத்திற்கு வந்து பிரபாகரனை பேட்டி கண்டார். நான் நினைக்கிறேன் இப்பேட்டியானது இந்துவின் முழுப்பக்க அளவில் இரண்டு இதழ்களில் தொடராகப் பிரசுரிக்கப்பட்டது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இத்தகைய முக்கியத்துவம் வேறெந்த கெரில்லாத் தலைவனுக்கும் 'இந்து' பத்திரிகையில் வழங்கப்பட வில்லை. அத்துடன் அவர் பல கட்டுரைகளை தனது சஞ்சிகையான 'புரன்ட் லைன்' இல் எம்மிடமிருந்து பெற்ற புகைப்படங்களுடன் பிரசுரித்தார்...........

ஒக்டோபர் மாதத்தில் இந்தியாவானது தமிழ்நாடு பொலிஸ் மற்றும் 'கியூ' பிரிவு ஊடாக எமது பாதுகாப்பிற்கென நாம் வைத்திருந்த ஆயுதங்களையும், தொலைத் தொடர்பு சாதனங்களையும் கைப்பற்றி எம்மையும் கைது செய்தது. இதில் ஆச்சரியப்படக்கூடியது யாதெனில் இவற்றை எமக்கு இந்திய மத்திய அரசு றோ (RAW)மூலமாக வழங்கியிருந்தமைதான். பிரபாகரன் உண்ணாவிரதப் போரினை ஆரம்பித்தார். தொலைத் தொடர்பு சாதனங்கள் மீள அளிக்கப்பட்டன. நவம்பர் மாதத்தில் பிரப்பாகரன் வீட்டுக்காவலில் வைக்கப்படார். இது நவம்பர் மாதத்தில் சார்க் தலைவர்களின் உச்சி மகாநாடு பெங்களூரில் நடைபெறமுன்பு நடந்தது. திரு ராம் எம்மிடம் ஓடிவந்து எமக்கு தன்னிச்சையா கவே உதவி புரிய விரும்பினார். அவர் எம்மிடம், பிரபாகரன் தனது வீட்டில் சில காலம் தங்க முடியும் என்றும் பொலிசார் இறுதியா கத்தான் தனது வீட்டை சந்தேகிப்பார்கள். எனவே அதுவே பாதுகாப்பானது என்றும் கூறினார்..."

சரிநிகர் மாத இதழ் இல. 6 அலோ சாலை கொழும்பு 3 இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் சார்பில் ( mirje) ச.பாலகிருஷ்ணனால் இரத்மலானை நவமக அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது 1992 10 20